ISSN 1391-9504




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாயக்க வம்ச மன்னர்கள்

சிங்கள அரச வம்சம் நரேந்திரசிங்க மன்னனுடன் முடிவுற்றது. 'நாயக்கர்' எனும் புதிய மன்னர் பரம்பரை ஆரம்பமாகியது. அவர்கள் தென் இந்திய அரசவம்சத்தைச் சேர்ந்த வர்கள். நரேந்திரசிங்க மன்னனின் அரசவம்சம் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக இந்நாட்டை ஆட்சி செய்தது. இந்த அரசவம்சத்தை ஆரம்பித்து வைத்தவர் கோணப்பு பண்டார என்பவராவார். அவர் தமது மனைவியாகிய அரசியின் மூலமே தமது அரசாட்சி உரிமையைப் பெற்று விமலதர்மசூரியன் என்ற பெயரில் அரசனானார். அவரின் மனைவி கம்பளை ராச்சியத்தில் அரசாட்சி புரிந்த அரச வம்சத்தைச் சார்ந்த கரலியத்த மன்னனின் மகள். அவளின் பெயர் தோனா கத்தரினா.

விமலதர்மசூரியனின் அரச வம்சம் கி.பி 1594 இல் ஆரம்பமாகியது. இந்த வம்சம் கண்டியிலேயே அரசாட்சி புரிந்தது. படிப்படியாக, கோட்டை ராச்சியம் வீழ்ச்சியடைந்த கையோடு, கண்டி ராச்சியம் பலமடைந்தது. பின்னர் இரண்டாம் இராஜசிங்கன், இரண்டாம் விமலதர்மசூரியன் மற்றும் நரேந்திரசிங் கன் ஆகிய மன்னர்கள் இலங்கையில் பேரரசர்கள் போல் ஆட்சி செய்தனர்.

நாயக்கர் வம்சத்தின் கைகளுக்கு சிங்கள அரசாட்சி சென்றதற்கு அரசிகளே காரணமானார்கள். நீண்ட நெடுங்காலமாக இந்தியாவில் இருந்தே முடிக்குரிய இளவரசிகளை அழைத்து வருவது ஒரு வழக்கமாக இருந்து வந் துள்ளது. பின்னர் ஏற்பட்ட முரண்பாடு கள் காரணமாக, அந்தப் பழக்கம் கைவிடப்பட்டது. அதனை மீண்டும் செனரத் மன்னனே ஆரம்பித்து வைத்தான். அதுவரை கோட்டை மற்றும் கண்டி மன்னர்கள் தமது பட்டத்து அரசிகளாக சிங்களப் பெண்களையே தெரிவு செய்தனர். சாதாரண உயர்குடி ஒருவரின் மகனாகிய செனரத்தும் அரசியாகத் தேர்ந்தெடுத்தது தோனாகத் தரினாவைதான். அவளின் பிள்ளைகளோ சூரிய வம்சத்தி னராகவே கருதப்பட்டனர். அவர்களின் கௌரவத்தை அதிகரிப்பதாக எண்ணியே தேசிய அரச குடும்பங்களைக் கைவிட்டனர். இந்தியாவிலி ருந்து இளவரசிகளை அழைத்து வந்தனர். இரண்டாம் விமலதர்மசூரிய னும் நரேந்திரசிங்க மன்னனும் நாயக்க வம்ச இளவரசி களையே பட்டத்து அரசிகளாக நியமித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AH1N1 வைரஸ் காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம்

AH1N1 எனும் வைரஸ் காய்ச்சல் மீண்டும் அதிகளவில் பரவி வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் சிகிச்சைப் பிரிவு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே இந்த நோய்த்தொற்றுக்கு உள்ளானவர்கள் அதிகம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சீரற்ற காலநிலையினால் நிலவும் மழை, வெள்ளப்பெருக்கு போன்றவற்றின் காரணமாகவே, இந்த நோய் பரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இருமல், தடிமன், காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்படின் உடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் அவ்வமைச்சு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.




# விரலால் 'சார்ஜ்' செய்யலாம்!



செல்ஃபோன் பாவிப்பவர்கள் பெரும்பாலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்றுதான் செல்ஃபோனின் மின்கலத்தில் 'சார்ஜ்' தீர்ந்துவிடுவது. இதனால் உடனே சார்ஜ் செய்துகொள்ளக்கூடிய வசதிகள் இல்லாத பட்சத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது. இதுபோன்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இலகுவாகவும் செலவின்றியும் சார்ஜ் செய்வதற்கும் தற்போது புதிய வழிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த புதிய வழிமுறையானது செல்ஃபோனின் மின்கலத்திலேயே அமையப்பெற்றுள்ளது. 'Finger powered phone battery' என அது அழைக்கப்படுகின்றது. சோங் டீஹோ, ஹீஜின் லீ ஆகிய செல்ஃபோன் வடிவமைப்பாளர்களே இதனை வடிவமைத்துள்ளனர்.




இதன்படி, குறித்த மின்கலத்தில் சார்ஜ் தீர்ந்து போனால், அதில் உள்ள துளையில் விரலை நுழைத்து சில சுற்றுகள் சுற்றினால் போதும்; தற்காலிகமாகப் பேசும் அளவுக்கு சார்ஜ் ஆகிவிடும். நீங்கள் சுற்றும் வேகத்துக்கு ஏற்றபடி, கூடுதல் அளவு சார்ஜும் செய்து கொள்ளலாம். விரலைப் பயன்படுத்துவதை விரும்பாதவர்களுக்கு அதற்கென விசேட குச்சி ஒன்று வழங்கப்படும். அதில் வைத்து மின்கலத்தை சுழற்றினாலும் சார்ஜ் ஆகும். இம்முறை தவிர, தேவைக்கேற்ப வழக்கமான முறையிலும் சார்ஜ் செய்துகொள்ள முடியும்.



க.பொ.த சா/தரப் பரீட்சை:

# கணித வினாத்தாள் II விடையளிக்கும் நேரம் 1/2 மணியால் நீடிப்பு



இந்த வருடத்திலிருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சை கணிதபாட வினாத்தாளின் பகுதி II இற்கு விடையளிப்பதற்காக, வழங்கப்படுகின்ற முழு நேரம் மேலும் 1/2 மணித்தியாலத்தால் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க சகல பாடசாலை அதிபர்களுக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் கணிதபாட வினாத்தாள் II இற்கு விடையளிப்பதற்கு இதற்கு முன்னர் 2 மணிநேரமே வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இம்மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணைகள் பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# மலையகப் பாடசாலைகளுக்கு 258 டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்கள்



மலையகத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளில் பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஏற்ப, கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்கள் 258 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். சிங்கள மொழி மூலம் 138 ஆசிரியர்களும் தமிழ் மொழிமூலம் 120 ஆசிரியர்களும் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.



# யாழில் 110 பாடசாலைகள் பூரணத்துவமானதாக மாற்றப்படவுள்ளன

யாழில் தெரிவு செய்யப்பட்ட 110 பாடசாலைகளை சகல வளங்களும் கொண்ட பூரணத்துவம் பெற்ற பாடசாலைகளாக மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பாடசாலைகளுக்கு உயர் கல்வி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வட மாகாண ஆளுநர் பீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். இதுதவிர; மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகளை போஷிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலைகளில் கணினிக்கூடம், விஞ்ஞானகூடம், விளையாட்டு அரங்கு போன்றவை சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கையில் 20% ஆனோர் மனநிலை பாதிப்பில்...

இலங்கை வாழ்மக்களில் 20 சதவீதமானோர் ஏதோ ஒருவகையில் மனோரீதியிலான பாதிப்புக்களுக்கு உள்ளாகியவர்களாக இருப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதாரத்துறை மேற்கொண்ட ஆய்வின்படி, இவர்களில் 1 சதவீதமானோர் கடுமையான மனநிலை பாதிப்பிற்கு உள்ளாகியவர்களாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், உணவுப் பழக்கங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் வாழ்க்கை நடைமுறை வட்டத்தில் காணப்படுகின்ற சலிப்புத் தன்மை ஆகியனவே என்றும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இதனை இயன்றளவில் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் சுகாதாரத்துறை அமைச்சு தெரிவிக்கின்றது.

நாட்டின் சனத்தொகையில் 14 சதவீதமானோர்கள் கண் நோயினாலும் 90 சதவீதமானோர் வாய் சம்பந்தமான பல்வேறுபட்ட நோய்களினாலும்



80 சதவீதமானோர் பல்வேறுபட்ட புற்று நோய்களினாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்திருப்பதாக இந்த ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை உலுக்கிய 'சுனாமி'


சார்ள்ஸ் எப்.றிச்டர்



## அதிர்ச்சிமிக்க இயற்கை அனர்த்தம்

**சுனாமி பற்றி உலக மக்கள் அறிந்திருந்தபோதிலும், இதுபற்றி இலங்கை மக்கள் அறிந்து கொண்டதும், அனர்த்தம் பற்றிப் புரிந்து கொண்டதும் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னர்தான். அதுவரை நாட்டில் இடம்பெற்ற மனித உயிர்ப் பலிகளுக்கு காரணமென ஒரு தனிநபரையோ, குழுவையோ விரல் நீட்டிப் பழகிப்போன நம்மவர்கள், இப்பாரிய அனர்த்தத்துக்கும் அழிவிற்கும் முற்றுமுழுதாக இயற்கையே காரணமெனக் குற்றம் சுமத்த வேண்டிய நிலை ஏற்பட்டது**

2004 டிசம்பர் 25 ஆம் திகதி இரவு நத்தார் களியாட்டங்களில் லயித்திருந்த மக்கள், பிறக்கப்போகும் புதுவருடத்தைக் கொண்டாடக் காத்திருந்த வேளை, மறுநாள் காலை 26 ஆம் திகதி இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. 9.00 ரிச்டர் அளவிலான பாரிய பூமியதிர்ச்சி இலங்கை நேரப்படி, அதிகாலை 6.58 மணிக்கு சுமாத்ராத் தீவை அண்டியுள்ள கடற்பகுதியில் சுமார் 10 கிலோ மீற்றர் கடலாழத்தில் ஏற்பட்டது.

### ரிச்டர் அளவு

ரிச்டர் அளவுகொண்டு பூமி அதிர்வின் சக்தியைக் கணிக்கத் தொடங்கியது 1935 ஆம் ஆண்டிலிருந்தேயாகும். இதனை அறிமுகப்படுத்தியவர் சார்ள்ஸ் எப்.ரிச்டர் என்பவராவார். ரிச்டர் அளவு 0 முதல் 10 வரையிலேயே கணிக்கப்படுகின்றது. பூமியதிர்வு மைக்ரோ மீற்றர் என்றும் கணிக்கப்படுகின்றது. இதன்படி, 9 ரிச்டர் அளவீட்டின் பூமியதிர்வானது, 100 கோடி மைக்ரோ மீற்றர் பலம் வாய்ந்ததென்று கூறப்படுகின்றது. எவ்வாறிருந்தபோதிலும் 11 ரிச்டர் அளவுக்கு மேல் பூமியதிர்வு வருவதில்லை என்று புவியியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

2004 ஆம் ஆண்டின் பூமியதிர்வை முதன்முதலாக 'ஹவாய்' எச்சரிக்கை மையத்திலிருந்து அறிந்தவர் ஸ்டுவர்ட் வெய்ன்ஜ்டைன் (Stuart Weinstain) என்பவராவார். சுனாமி அலைகள் நமது பிராந்தியத்தைத் தாக்க முன்னரே அவர் அதனை அறிந்திருந்தார். இது தொலைதொடர்பில் ஏற்பட்ட சிக்கலும் அனர்த்தம் பற்றிய சரியான புரிந்துணர்வும் இல்லாத காரணங்களால் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் போய்விட்டதாகவும் அதற்காகத் தாம் மிகவும் வருந்துவதாகவும் குவைத்திலிருந்து வெளியாகும் The Khaleej Times என்ற பத்திரிகைப் பேட்டியொன்றின்போது அவர் தெரிவித்திருந்தார். 26 ஆம் திகதி அதிகாலை கடலுக்கடியில் ஏற்பட்ட பூமியதிர்வானது சுனாமி அலையை ஏற்படுத்தி, அது சுமார் 2 மணித்தியாலங்களின் பின்னரே இலங்கையின் கடலோரங்களைத் தாக்கியது.



### உயிர்ப்பலியும் அழிவும்

இந்து சமுத்திரத்திலுள்ள சுமார் பதினொன்றிற்கும் மேற்பட்ட தென்கிழக்காசிய நாடுகளைச் சார்ந்த கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டு, லட்சக்கணக்கானவர்களின் உடைமைகளை அழித்தொழித்து, பல்லாயிரக் கணக்கான மக்களை அகதிகளாக்கி விட்ட பின்னரே, சுனாமி என்ற ஆழிப்பேரலையின் அனர்த்தங்களையும் அதன் அர்த்தத்தையும் இப்பிராந்திய மக்கள் சரிவரப் புரிந்துகொண்டனர்.

குழந்தைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோர்களை இழந்த குழந்தைகள், ஆசிரியர்களை இழந்த மாணவர்கள், மாணவர்களை இழந்த ஆசிரியர்கள், உற்றார், உறவினர், நண்பர்களை இழந்தவர்கள், அன்பான அயலவர்களையும் ஒன்றாக வேலை செய்தவர்களையும் பெறுமதியான உடைமைகளையும் இழக்க வைத்துப் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தவிக்கச் செய்துவிட்டது இந்த ஆழிப்பேரலை.



இப்பேரலையானது கடற்கரைகளில் ஓங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்களுக்கும் மேலாக உயர்ந்ததாகவும் சிலர் தென்னை மர உயரம் வரை வீசி எறியப்பட்டு, அவற்றில் தங்கி நின்று உயிர் தப்பியதாகவும் அறிய முடிந்தது. 30-40 அடிகள் வரை உயர்ந்து சென்ற இப்பேரலையானது சில இடங்களில் 90 அடிகள் வரை உயர்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.



## டிசம்பர் 26 இல் 6 ஆவது ஆண்டு நினைவு தினம்

ஆழிப்பேரலை ஏற்பட்டு சுமார் மூன்று மாதங்களின் பின்னர் ஊர்ஜிதமான தகவல்களின்படி, இந்தோனேஷியாவிலேயே அதிகமானோர் இறந்துள்ளனர் என்று தெரியவந்தது. இங்கு சுமார் 2,36,012 பேர் இறந்தனர் என்றும் அடுத்தபடியாக, 31,150 இலங்கையர்களும் இந்தியாவில் 16,749 பேரும், அந்தமான்-நிகோபார் தீவுகளில் 1,925 பேரும், தாய்லாந்தில் 5,395 பேரும், சோமாலியாவில் 298 பேரும், மாலைதீவில் 82 பேரும் மலேசியாவில் 68 பேரும், பர்மாவில் 69 பேரும் பங்களாதேஷில் 2 பேரும் கென்யாவில் ஒருவருமாக இறந்ததோடு, பாதிப்புக்குள்ளான நாடுகளில் சுமார் 14,374 பேரும் காணாமல் போயினர். இவ் அனர்த்தம் காரணமாக, இலங்கையில் மட்டும் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்விடங்களை இழந்தனர். இந்த அனர்த்தம் காரணமாக, இலங்கையில் தாய், தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகள் 1,060 பேர் என்றும் தாயை அல்லது தந்தையை மட்டும் இழந்தோர் சுமார் 3,414 பேர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.



### பூமியதிர்ச்சியும் சுனாமியும்

நிலநடுக்கம் அல்லது பூமியதிர்ச்சி என்பது இரு வகைகளில் உண்டாகலாம். ஒன்று தரைப்பகுதிகளில் ஏற்படுகின்றது. இவை தரைப்பிரதேசங்களை அதிர்வுக்குள்ளாக்கி, நிலையான சொத்துக்களை அதிர்வுக்குள்ளாக்குவதன் மூலம் உயிரினங்களுக்கும் உடைமைகளுக்கும் பாரிய சேதங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றது. இவ்வாறான நிலநடுக்கம் அதிகமாக ஜப்பான் போன்ற நாடுகளிலேயே ஏற்படுகின்றது.

### தகடுகளில் வெடிப்பு

புவியின் மேற்பகுதி கற்கோளங்களை ஆரம்பகால ஆய்வாளர்கள் 6 தகடுகள் என்றனர். தற்போது இவை 12 தகடுகளாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இறுதியாக 13 ஆவது தகடாக இந்தியத் தகடு குறிப்பிடப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்வானது இந்திய, சுமாத்ரா, அவுஸ்திரேலியாத் தகடுகள் சந்திக்கின்ற இடத்தில், இந்தியத் தகட்டில் ஏற்பட்ட வெடிப்பின் தாக்கத்தினாலேயே நிகழ்ந்துள்ளதாக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த வெடிப்பானது இமயமலையை நோக்கி நகர்வதாகவும் அதனால், எதிர்காலத்தில் இந்தியப் பிராந்தியத்தில் பூமியதிர்வுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ.ஏ.ஸத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



## முகாமைத்துவம் - 32

## கற்றலுக்கான ஆலோசனைகள்

# மாணவர்களுக்கான ஆலோசனை வகைகள்

கல்வி உயிர்ப்படைவதற்கு ஆலோசனை எனும் மூலக்கல் மிகவும் அவசியமான தாகும்.

ஆலோசனையானது இரு வகைப்படுகின்றது. அவையாவன; தனியாள் ஆலோசனை, குழு ஆலோசனை என்பனவாகும்.

### தனியாள் ஆலோசனையும் நேர்காணலும்

தனியாள் ஆலோசனையானது, பல்வேறு வகையான நேர்காணல்கள் மூலம் இடம்பெறுகின்றது. நேர்காணல் என்பது நேர் காண்பவருக்கும் காணப்படுபவருக்கும் இடையே பரஸ்பரம் தகவல்களைக் கொடுப்பதும்-பெறுவதுமாகும். இதன்மூலம் நடத்தையில் மாற்றம் ஏற்படும். மாணவர் ஒருவர் தானே திட்டமிடுவதற்கும் தீர்மானித்துச் செயற்படுவதற்கும் எது ஏதுவாக அமைகின்றதோ, அந்த விடயம் நேர்காணலை வெற்றி பெறச் செய்யும். அத்துடன், ஒருவருக்கு வழங்கப்படும் ஆலோசனை இன்னொருவருக்குப் பொருந்தாமலும் அமையலாம்.

**மாணவர் ஒருவர் பின்வரும் விடயங்களில் நேர்காணல் ஒன்றினை நாடலாம்.**

* பாடங்களில் மாற்றம்
* இரண்டில் ஒன்றைத் தெரிவதில் வழிகாட்டல்
* கற்கைநெறிகள் எங்கே உண்டு என்பது பற்றிய தகவல்கள்
* இணைப்பாடவிதான நடவடிக்கைகள்
* இலவச மாணவர்-கட்டணச் சலுகை
* நியாயமற்ற வழிமுறைகள்
* வீட்டில் சங்கட நிலை
* பிற மாணவர்களால் இம்சை
* சில ஆசிரியர்களோடு புரிந்துணர்வு இன்மை
* கல்வி முடிந்த பின்னரான நிலை
* விடுதியில் வசித்தல்









### நேர்காணல் வகைகள்

**1. அறிமுக நேர்காணல் (Introductory Interview)**

இது ஒருவரோடு பரஸ்பர உறவினை, தொடர்பினை வியாபிக்கும் நோக்கில் கலந்துரையாடல்கள், நடைமுறைகளைக் கொண்டிருக்கும். இங்கு ஆலோசனை வழங்குபவர் தன்னை அறிமுகம் செய்வதோடு, பின்னர் நிகழவிருக்கும் நடைமுறைகள் பற்றியும் கூறுவார். இது 10-15 நிமிடங்களுக்கு நடைபெறுவதோடு, அடுத்த நேர்காணலுக்கான நேரம், இடம் என்பன தீர்மானிக்கப்பட்டு முடிவடையும். இந்நேர்காணல் மாணவர் கல்லூரியில் சேர்ந்தவுடன் நடாத்தப்படல் வேண்டும். மாணவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகு முன் ஆலோசனை வழங்கப்படாவிட்டால் தீர்வு காணல் சிரமமாகி விடும்.



**2. உண்மைகாண் நேர்காணல் (Fact Finding Interview)**

இந்த நேர்காணலானது ஆலோசனை பெறுபவர் நேராகவோ,எழுத்து மூலமாகவோ அல்லது சில வினாக்களுக்கு விடையாகவோ தெரிவிக்க விரும்பாத, அவரின் மனப்பாங்கின் அழுத்தம் பற்றி அறிய உதவும். முன்னர் தெரிவிக்கப்படாத விருப்புக்கள் எந்தளவு வலிமையானது என்பதை ஆலோசனை வழங்கப்படுபவர் தீர்மானிக்க உதவும். ஏனையவர்களுடன் ஆலோசனை பெறுபவருக்கு இருக்கும் உறவு, அவரது நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் இதன்போது பெறப்படும்.

**3. தகவல் வழங்கு நேர்காணல் (Informative Interview)**

ஆலோசனை பெறுபவர் வேறு வழிகளில் பெற்றுக் கொண்ட விடயங்கள், தகவல்கள் பற்றி அறிவதற்காக நடாத்தப்படும் நேர்காணல் இதுவாகும். தனக்கு ஏற்படும் வினாக்களுக்கு விடை காண அல்லது உயர் பதவியில் உள்ள ஒருவர் குறித்த நபர் பற்றி எடுத்துள்ள தீர்மானத்தைத் தெரிவிக்க இது பயன்படும். ஆலோசனை வழங்கும் அதிகாரியானவர் மாணவரின் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பப்படிவமொன்று ஏற்கப்படல் அல்லது நிராகரிக்கப்படல், கற்கைநெறி மாற்றம், அதிபர் அல்லது திணைக்களத் தலைவர் ஒருவர் இவர் பற்றி எடுத்த தீர்மானம் என்பனவற்றைத் தெரியப்படுத்த இது உதவும்.

**4. சிகிச்சை வழங்கு நேர்காணல் (Therapeutic Interview)**

நாம் அனைவரும் நம்முடன் ஆரோக்கியமான தொடர்பு கொண்டவர்களோடு நமது பிரச்சினைகள், கனவுகள், அபிலாசைகள் என்பன பற்றிக் கலந்துரையாட விரும்புகின்றோம். இத்தகைய நேர்காணலில் ஒருவர் தன்னிடம் அன்பு காட்டும் இன்னொருவரிடம் 'மனம் விட்டுச் சிந்திக்க' அனுமதிக்கப்படுகின்றார். இது அவரது பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய வழிவகுக்கும்.

(தொடரும்)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

## 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



வெலம்பொட மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.அஸ்மா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் ஹாபீக்-முனவ்வரா தம்பதியரின் புதல்வியாவார்.



இரத்தினபுரி பார்குசன் உயர்தரப் பாடசாலை தமிழ்ப் பிரிவு மாணவன் நிரோஷன் தில்ஷான்,142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பிரான்சிஸ் சேவியர்-திரேசா சிசிலியா தம்பதியரின் புதல்வராவார்.



வெலம்பொட மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.சுமையா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மன்சூர்-பாயிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



இரத்தினபுரி பார்குசன் உயர்தரப் பாடசாலை தமிழ்ப்பிரிவு மாணவன் எஸ்.பிரியதர்ஷன், 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சரவணகுமார்-பவானி தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.ஷிம்லா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அக்குறனை மு.பா.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், ஜெஸீம்-சிஃபாமா தம்பதியரின் புதல்வியாவார்.



ப/தம்பேத்தன்னை இல.2 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எஸ். பிரியானந்தன், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சதாசிவம்-வசந்தி தம்பதியரின் புதல்வராவார்.



பு/கண்டல்குழி மு.ம.வித்தியாலய மாணவி எஃப்.சிப்னாஸ், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நாஸர்-நிபாயா தம்பதியரின் புதல்வியாவார்.



ப/தம்பேத்தன்னை இல.2 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவி பி.மதுப்ரியா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், புஸ்பராஜ்-மஞ்சுளாதேவி தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.பாஹிம், 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். உடத்தலவின்னை ஜாமியுல் அஸ்ஹர் மத்.கல்லூரியில் கல்வி கற்கும் இவர், பரீத்-பரீனா தம்பதியரின் புதல்வராவார்.



எம்.ஸாஜித், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். களு/அல்-ஹம்ரா ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் இவர், ஸாராஸ்-ஸரீனா தம்பதியரின் புதல்வராவார்.



எம்.ஆஷிக், 182 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/ஜாமியுல் அஸ்ஹர் மத்.கல்லூரியில் கல்வி கற்கும் இவர், நிஸாம்தீன்-மும்தாஜ் பேகம் தம்பதியரின் புதல்வராவார்.



பு/முந்தல் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் டனுசன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கணேசன்-கலைச்செல்வி தம்பதியரின் புதல்வராவார்.



துஷானி ரமேஷ், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவியான இவர், ரமேஷ்-உதயராணி தம்பதியரின் புதல்வியாவார்.



வ/தவசியாகுளம் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் ஜெ.லக்சனா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஜெகதீஸ்வரன்-வளர்மதி தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.இன்ஸாப் ஹிஸ்னி, 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கமு/அல்-ஹிலால் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், இஸ்மாலெவ்வை-ஏ.ரஹ்மத் தம்பதியரின் புதல்வராவார்.




க/தெழும்புகஹவத்தை மு.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் முஹம்மட் முன்ஸிர், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முஹ்ஸீன்-சித்தி முனவ்வரா தம்பதியரின் புதல்வராவார்.



*அக்குறஸ்ஸ, கொடபிடிய ஸாதாத் மு.ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்களான பாஸில் ஹுஸைன் (152 புள்ளிகள்), ஏ.மஸிய்யா (147 புள்ளிகள்), பீ.சிம்லா (149 புள்ளிகள்) ஆகியோர் தமது பாடசாலை அதிபர் ஏ.டபிள்யூ.மொஹமட் அவர்களுடன் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது



**கி.பி 1505 ஆம் ஆண்டு வரை இலங்கையைச் சேர்ந்த அரச வம்சத்தினரே ஆட்சியாளராக நாட்டை ஆட்சி செய்தனர். பின்னர் ஐரோப்பியர்கள் காலத்துக்குக் காலம் எமது நாட்டை ஆக்கிரமித்தனர். அதனாலேயே, இலங்கையின் சுயாதிபத்தியம் இல்லாமல் போயிற்று. அத்துடன், செல்வம் திரட்டுவதிலும் வாசனைப்பொருள் தேடுவதிலும் அமோக ஆசை கொண்ட போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் தமது அதிகாரத்தை இங்கு நிறுவிக் கொள்வதில் வெற்றி கண்டனர். அவர்கள் இந்நாட்டின் வளங்களை அபகரித்து தமது நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர். அங்கு அந்நாட்டு ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டு எமது நாட்டை பரிபாலனம் செய்ய வந்தவர்களே ஆளுநர்கள். இவர்களில் ஆங்கிலேய ஆளுநர்களே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றார்கள்**

## போர்த்துக்கேய ஆளுநர்கள்

கி.பி 1498 ஆம் ஆண்டு கடல் கடந்து வாஸ்கொடகாமா கிழக்குலகுக்கு வந்திறங்கிய பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிற்சில காரணங்களுக்காக கிழக்குலகின் அநேக தீவுகளில் போர்த்துக்கேயர் காலடியெடுத்து வைத்தனர். 1505 ஆம் ஆண்டு இலங்கைக்கும் வந்தனர். கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய இவர்கள் ஆட்சி புரிய தமது ஆளுநர்களை நியமித்துக் கொண்டனர்.

| | |
|---|---|
| 01. பெட்ரோ லோபஸ் த சூஸா | 1594 |
| 02. ஜெரனிமோ டி அசுவேது | 1594 - 1613 |
| 03. பிரன்சிஸ்கோ டிமென்சிஸ் | 1613 - 1614 |
| 04. மெனுவெல் மெஸ்கரெஞ்ஞெஸ் | 1614 - 1616 |
| 05. நுனோ அலவாரிஸ் பெரைரா | 1616 - 1618 |
| 06. கொன்ஸ்டன்டைன் த சா நொரஞ்ஞு | 1618 - 1622 |
| 07. ஜோர்ஜ் டி எல்பகர்க் | 1622 - 1623 |
| 08. கொன்ஸ்டன்டைன் த சா கொரஞ்ஞு | 1623 - 1630 |
| 09. பிலிப் மெக்கரஞ்ஞெஸ் | 1630 - 1631 |
| 10. ஜோர்ஜ் த அல்மேதா | 1631 - 1633 |
| 11. திகுத மேலோ கெஸ்த்ரோ | 1633 - 1635 |
| 12. ஜோர்ஜ் த அல்மேதா | 1635 - 1636 |
| 13. திகுத மெலோத கெஸ்த்ரோ | 1636 - 1638 |
| 14. என்தோனியோ மெஸ்கரஞ்ஞெஸ் | 1638 - 1640 |
| 15. பிலிப் மெஸ்கரஞ்ஞெஸ் | 1640 - 1645 |
| 16. மெனுவெல் மெஸ்கரஞ்ஞெஸ் | 1645 - 1653 |
| 17. பிரான்சிஸ்கோ த மேலோ த கெஸ்த்ரோ | 1653 - 1655 |
| 18. என்தோனியோ த சூஸா குடிஞ்ஞோ | 1655 - 1656 |
| 19. என்தோனியோ த எமரல் த மெனசிஸ் | 1656 - 1658 |

## ஒல்லாந்த ஆளுநர்கள்

கறுவா உற்பத்தியில் பிரசித்தி பெற்றிருந்த இலங்கைமீது ஒல்லாந்தரும் தமது கவனத்தைச் செலுத்தினர். அதனால், இலங்கையின் வர்த்தகத்துறையை தம்வசம் வைத்திருந்த போர்த்துக்கேயரோடு, அவர்கள் யுத்தம் புரிய நேரிட்டது. இந்த யுத்தத்தில் மலையக சுதேசிய ஆட்சியாளரின் உதவியோடு, 1658 ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

இதன் பின்னர் ஒல்லாந்த ஆட்சியாளர்கள், தாம் கைப்பற்றிய பிரதேசங்களை ஆட்சிபுரிய ஆளுநர்களை நியமித்துக் கொண்டனர்.

| | |
|---|---|
| 1. வில்லியம் கோஸ்தர் | 1640 |
| 2. ஜென்தெய்ஸ் பெயாட் | 1640 - 1646 |
| 3. ஜொவான் மட்சுகர் | 1646 - 1650 |
| 4. ஜேகொப் வொன் கிடென்சன் | 1650 - 1653 |
| 5. எட்ரியன் வென்தர் மேடன் | 1653 - 1660 |
| 6. ரைகொலொப் வொன் குன் | 1660 - 1663 |
| 7. ஜேகொப் ஹுஸ்மார்ட் | 1663 - 1664 |
| 8. ரைகொலொப் வொன் குன் | 1664 - 1675 |
| 9. ரைகொலொப் வொன் குன் (கன்ட்டு) | 1675 - 1679 |

## பெட்ரிக் நோர்த் (1798-1805)



இலங்கை பிரித்தானிய முடியாட்சியின் காலனித்துவ நாடான பின் நியமிக்கப்பட்ட முதல் ஆளுநர் பெட்ரிக் நோர்த் என்பவராவார். இவர் 1798 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் கண்டியரசைக் கைப்பற்றக் கடும் பிரயத்தனம் எடுத்து 1803 ஆம் ஆண்டு யுத்தம் தொடுத்த போதும் ஆங்கிலேயப் படைகளால் அதனைக் கைப்பற்ற முடியவில்லை. இவரது நிர்வாகக் காலத்தில்தான் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டதோடு, பல்வேறு விடயங்களுக்காகப் பரிபாலனத் திணைக்களங்களும் உருவாக்கப்பட்டன. அத்தோடு, முன்பு ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்டிருந்த கொழும்பு செமினேரியை 'ரோயல் கொலேஜ்' எனப் பெயர் மாற்றி அதனை அபிவிருத்தி அடையச் செய்தார். அத்துடன், கல்வி அபிவிருத்திக்காகவும் நிதிகளை ஒதுக்கினார்.

## தோமஸ் மேட்லன்ட் (1805-1812)



ஆளுநர் பெட்ரிக் நோர்த்துக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட ஆளுநரே இவராவார். சிவில் சேவையாளர்களுக்குத் தமது சொந்தக் காணிகளில் பயிரிட்டுக் கொள்ளவும் அனுமதித்தார். கொழும்பு, காலி, சிலாபம், புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்கியதோடு, அரசியல் சட்டத்தை அமுல்படுத்துவதிலும் உறுதியுடன் செயலாற்றினார்.

## ரொபர்ட் பிரவ்ன்ரிக் (1812-1820)



1812 ஆம் ஆண்டு ஆட்சியைப் பொறுப்பேற்ற இவர், 10 வருட காலம் பதவி வகித்தார். இக்காலகட்டத்தில் கண்டியரசைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குள் கொண்டுவர எடுத்த முயற்சியின் காரணமாக, புரட்சிகள் வெடித்தன. எனினும், 1815 ஆம் ஆண்டு கண்டி அரசு ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. ரொபர்ட் பிரவ்ன்ரிக் புகையிலை வியாபாரத்தின்மூலம் கூடிய இலாபத்தைப் பெற முயன்றதோடு, பெரிய பூங்கா ஒன்றையும் உருவாக்கினார். அதுவே பேராதனைப் பூங்காவாகும். அத்தோடு, ஆங்கிலம் பயிலவும் பாடசாலைகளை ஸ்தாபித்தார்.

## எட்வர்ட் பெஜட் (1822-1823)



இவர் மிகக்குறுகிய காலமே ஆளுநர் பதவியை வகித்தார். 1822 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற இவரது சேவைகள் மகத்தானவையாகும். அரசுரிமை கோரிப் போராடிய வாரிசு ஒருவரினதும் அவரது ஆதாரவாளரினதும் புரட்சிக்குழுவை அழித்தொழித்து ஏற்பட இருந்த பெருங்கிளர்ச்சியை அடக்கினார்.

## எட்வர்ட் பான்ஸ் 1824-1831



இவர் 1824 ஆம் ஆண்டு ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன் 1820 முதல் 1822 வரை உதவி ஆளுநராகப் பணிபுரிந்தார். திறமைமிக்க நிர்வாகியான இவரது காலத்தில்தான் மக்கள் நலனுக்காக, அநேக செயற்பாடுகள் இடம்பெற்றன. இவர் இலங்கைக்குப் பிரதான வீதிகளை அமைப்பதில் முன்னின்று பணியாற்றினார். இலங்கையில் கோப்பி உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக, முன்னின்று உழைத்த இவர் மக்கள் தொகைக் கணிப்பீட்டையும் செய்தார். அத்தோடு, சில தபால் நிலையங்களையும் ஸ்தாபித்து ஐந்து 'மிஷனரி' பாடசாலைகளையும் ஆரம்பித்தார்.

## ரொபர்ட் வில்மட் ஹோர்டன் 1831-1837



1831 ஆம் ஆண்டு ஆளுநராகப் பொறுப்பேற்ற இவர் சில பெறுமதிமிக்க சேவைகளைப் புரிந்துள்ளார். இந்நாட்டின் முதல் பத்திரிகையை 1831 ஆம் ஆண்டு ஆரம்பிக்க வழி செய்தார். 1834 ஆம் ஆண்டு 'ஒப்சவர்' எனும் பத்திரிகையை அவரே ஆரம்பித்து வைத்தார். அத்தோடு, புதிய உயர்நீதிமன்றத்தையும் மாவட்ட நீதிமன்றங்களையும் கட்டியதுடன் வடக்கு-கிழக்கு-மேற்கு-தெற்கு- மத்திய மாகாணங்கள் என நாட்டை ஐந்து மகாணங்களாகப் பிரித்தார். ஆசியாவிலேயே முதன்முறையாக ஒரு தபால் வாகனம் பயணித்ததும் இவரது பதவிக்காலத்திலேயாகும். அந்த வாகனம் கொழும்பிற்கும் கண்டிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டது. ஒரு ரூபா நாணயம் புழக்கத்துக்கு வந்ததும் இக்காலகட்டத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜேம்ஸ் அலெக்சாண்டர் ஸ்டுவர்ட் மெகன்ஸி (1837-1841)



இவரது நிர்வாகக் காலகட்டத்திலேயே கோப்பி உற்பத்தியின் வசந்தகாலம் உருவாகியது. 1837 ஆம் ஆண்டு ஆளுநராக நியமிக்கப்பட்ட இவரே, மனநோயாளர்களுக்கான வைத்திய சாலையை அங்கொடையில் நிறுவினார். நாடுதோறும் பாடசாலைகளை அமைக்கவும் ஏற்பாடுகளைச் செய்தார். வேடர்களின் வாழ்வில் முன்னேற்றம் பெறச் செயற்பட்டார்.

## கொலின் கெம்பல் 1841-1847



பிரஜைகளின் ஆங்கில அறிவை மேம்படுத்தக் கடுமையாக உழைத்த இவர், 1841 ஆம் ஆண்டு ஆளுநராகப் பொறுப்பேற்றார். அவர் முன்னாள் இராணுவத் தளபதியாகவும் கடமையாற்றினார். இவரே, 1834 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆணைக்குழு கல்விச்சபையை புனர்நிர்மாணம் செய்தார். அத்துடன், அடிமை முறை ஒழிப்புச் சட்டத்தையும் உருவாக்கினார். 1845 ஆம் ஆண்டு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஸ்தாபித்தார்.

## வைகவுன்ட் டொரின்டன் 1847-1850

இவர் கொடூர நிர்வாகி என்றே கணிக்கப்படுகிறார். நாய் வரி, துப்பாக்கி வரி, வீட்டுடன் சேர்ந்த வெளி இருப்பிட வரி எனப் புதுப்புது வரிகளை வசூலித்தார். அதற்கான சட்டத்தையும் உருவாக்கினார். 1848 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியின்போது, ஏராளமான அப்பாவி மக்களைப் படுகொலை செய்வித்தார். இவரது ஆணையினாலேயே குடாபொலஹிமி புரன் அப்பு, கொங்காலே கொடபண்டா எனும் வீரர்கள் கொல்லப்பட்டனர். 'மார்ஷல்லோ' எனும் யுத்த காலச்சட்டத்தை அமுல்படுத்தியவரும் இவரேயாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு ஆளுநர்கள்



## ஹர்கியுலிஸ் ரொபர்ட் ரொபின்சன் (1865-1872)



1865 ஆம் ஆண்டு பதவியேற்ற இவரே கொழும்பு,கண்டி, காலி ஆகிய பகுதிகளில் நகர சபைகளை உருவாக்கியவராவார். எனவே, 'உள்ளூராட்சியின் பிதா' என்று இவர் அழைக்கப்பட்டார். 1867 ஆம் ஆண்டு கொழும்பு, கண்டி ரயில் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தார். 1869 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்தை உருவாக்கத் திட்டம் வகுத்தார்.

## வில்லியம் ஹென்றி கிரகரி (1872-1877)

1872 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர், முன்பு பிரிட்டிஷ் நாடாளுமன்ற அங்கத்தவராகவும் அங்குள்ள நூதனசாலை நிர்வாக சபை அங்கத்தவராகவும் பணியாற்றினார். அக்காலப் பகுதியில் கொழும்பு நூதனசாலை அமைக்கப்படுவதற்கு மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். 1873 ஆம் ஆண்டு கொழும்பு மாளிகாகந்தை வித்யோதய பிரிவெனவையும் 1875 ஆம் ஆண்டு வித்யாலங்கார பிரிவெனவையும் ஆரம்பித்தார். கொழும்புத் துறைமுகத்தில் இறங்குதுறை தீர்மானத்துக்கும் அவர் பங்களிப்பு வழங்கினார். கொழும்பு வீதிகளில் தெருவிளக்குகள் பொருத்தப்படவும் கழிவு நீரும் சாக்கடையும் குப்பைகளும் சேர்ந்து வீதிகள் அசுத்தப்படா திருக்கவும் செயலாற்றினார்.

## ஜேம்ஸ் ரொபர்ட் லொங்டன் (1877-1883)



1877 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற இவர் கோப்பிப் பயிர் நோயுற்று அழிந்ததால் தேயிலையையும் கொக்கோவையும் பயிரிடுமாறு ஆணையிட்டார். 1880 ஆம் ஆண்டு இந்நாட்டுக்கு வருகை தந்த சேர் ஹென்றி ஓல்கட், பிளெவெஸ்கி சீமாட்டி ஆகியோரோடு இணைந்து பரம வித்யாணர்த்த நிறுவனத்தை ஸ்தாபித்தமை ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அத்தோடு, நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டன் வரை ரயில் தண்டவாளம் போடப்பட்டதும் கரையோர ரயில் பாதை களுத்துறை வரை நீடிக்கப்பட்டதும் இவர் காலத்திலாகும்.

## ஆர்தர் ஹெமில்டன் கோர்டன் (1883-1890)



ஏழு வருட காலம் பதவி வகித்த இவர் தமது பதவியைப் பொறுப்பேற்றது 1883 ஆம் ஆண்டிலாகும். இவரே 1885 ஆம் ஆண்டில் விசாக தினத்தையும் இந்துக்களின் புனித நாளையும் ஹஜ் தினத்தையும் அரச விடுமுறை நாட்களாகப் பிரகடனம் செய்தார். ரூபா நோட்டு அச்சிடுவதை அரசுரிமை ஆக்கியதும் இவரது காலத்திலேயாகும். சட்ட நிர்ணய சபைக்கு முதன் முதலில் முஸ்லிம் ஒருவருக்கும் மலையக சிங்களவர் ஒருவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதும் இதே காலகட்டத்திலாகும். அத்தோடு, ஊவா மாகாணம் எனவும் சப்ரகமுவ மாகாணம் எனவும் இரு புதிய மாகாணங்களும் உருவாக்கப்பட்டன.

## ஆர்தர் எலிபேங்க் ஹெவ்லொக் (1890-1896)



1890 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர் முன்பு இங்கிலாந்திலுள்ள டிரிடெட்டிலும் ஆளுநராகப் பதவி வகித்துள்ளார். இவர் கட்டட நிர்மாணப் பணிகளில் அதிகமாக ஈடுபட்டுள்ளார். 1892 ஆம் ஆண்டு இயந்திரவியல் கல்லூரி உருவாகியமை. கொழும்பு கோட்டை தபால் நிலையம் ஆரம்பிக்கப்பட்டமை, பொரளையில் லேடி ரிஜ்வே குழந்தைகள் வைத்தியசாலை கட்டப்பட்டமை, பெருந்தெருக்கள் உட்பட, தண்டவாளங்கள் செப்பனிடப்பட்டமை யாவும் இவராலேயே மேற்கொள்ளப்பட்டன.

## ஜோசப் வெஸ்ட் ரிஜ்வே (1896-1903)



1900 ஆம் ஆண்டு களனிவெளி ரயில் பாதை அமைக்கப்பட்டதோடு, 1902 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வரை ரயில் பாதை போடப்பட்டதும் இவர் செய்த காரியங்களாகும். 1896 ஆம் ஆண்டு மின்சாரம் வந்ததால் கொழும்பு நகரில் டிரேம்கார் உபயோகத்துக்கு வந்தது. கல்வித்துறைக்கு முக்கியமான எலிஸ் கொமிஷன் அறிக்கை எழுதப்பட்டதும் முதல் மோட்டார் கார் இந்நாட்டுக்குத் தருவிக்கப்பட்டதும் இவரது சேவைகாலத்திலாகும்.

## ஹென்றி ஆர்தர் பிளேக் (1903-1912)



1903 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர் விவசாயத்துறையில் மிகுந்த கவனம் செலுத்தினார். றப்பர் உற்பத்தியை வருமானப் பயிர் செய்கையாக இவரே அபிவிருத்தி செய்தார். வடக்கிலும் கிழக்கிலும் அநேக வாவிகளைப் புனரமைப்பு செய்தார். பொலிஸ் திணைக்களத்தை உருவாக்கியதோடு, கண் மருத்துவ மனையையும் கட்டுவித்தார்.

## ஹென்றி மெக்கலம் (1907-1913)



1907 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர், 1912 ஆம் ஆண்டு மதுவரிச் சட்டமூலத்தை நிறைவேற்றியதும் முழு நாட்டிலும் மதுச்சாலைகள் திறக்கப்பட்டன. ஐந்து சத நிக்கல் காசு பாவனைக்கு வந்ததோடு, உள்நாட்டு மக்களின் வாக்குகளால் நிர்வாக சபைக்கு ஒருவர் தெரிவு செய்யப்படும் முறை ஆரம்பமானதும் இவரது நிர்வாகக் காலத்திலேயாகும். அத்தோடு, விவசாயத் திணைக்களமும் பேராதனை விவசாயக் கல்லூரியும் இவரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.

## ஜோர்ஜ் எண்டர்சன் (1850-1855)



1850 ஆம் ஆண்டு இவரது பதவிக்காலத்தில்தான் பிரிட்டிஷ் அரசிடமிருந்த புனித தந்தம் தியவதன நிலமே உட்பட, சில பிக்குகளிடம் மீளவும் கையளிக்கப்பட்டது. கோப்பி விளைச்சலும் வர்த்தகமும் இவரது காலத்திலேயே முன்னேற்றம் கண்டது. அத்துடன், திறமையான மாணவர்கள் கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் க[illegible] பெறவும் இவர் ஏற்பாடு செய்தார்.

## ஹென்றிவோர்ட் (1855-1860)



மே மாதம் 1855 ஆம் ஆண்டு பதவியைப் பொறுப்பேற்ற இவர் திறமையும் விவேகமும் மிக்கவர். கட்டட நிர்மாணக் கலையில் மட்டுமன்றி, ஏனைய துறைகளிலும் பல அபிவிருத்திகளைச் செய்துள்ளார். 1857 ஆம் ஆண்டு கொழும்பில் வெளிச்ச வீடு கட்டப்பட்டதும் கொழும்புக்கும் காலிக்குமிடையில் தொலைதொடர்பை முதன்முதலாக ஏற்படுத்தியதும் காலி முகத்திடலை உருவாக்கியதும் ரயில் போக்குவரத்துக்காகத் தண்டவாளப் பாதைகள் அமைக்கப்பட்டதும் கட்டுகஸ்தோட்டைப் பாலம் கட்டப்பட்டதும் 1850 ஆம் ஆண்டு தபால் முத்திரை பாவனையில் இருந்ததும் இவரது பதவிக்காலத்திலேயே ஆகும். இவர் ஜூன் மாதம் 1860 ஆம் ஆண்டு சென்னைக்கு ஆளுநராகப் பதவி மாற்றம் பெற்றுச் சென்றார்.

## சார்ள்ஸ் ஜஸ்டின் மெகார்த்தி (1860-1865)



1860 ஆம் ஆண்டு பதவியேற்ற இவராலும் சில முக்கிய சேவைகள் இடம்பெற்றன. 1862 ஆம் ஆண்டில் 'லங்கா லோகய' எனும் பத்திரிகையையும் 1863 ஆம் ஆண்டில் லக்ரிவ்கிரண்' எனும் பத்திகையையும் ஆரம்பிக்க இவர் உதவி புரிந்துள்ளார். கோப்பி உற்பத்தியிலும் அதிக லாபம் பெற வைத்ததோடு, செப்புக்காசையும் இவரே புழக்கத்துக்குக் கொண்டு வந்தார். கொழும்பு நூல் நிலையத்தைக் கட்ட முன் நின்று உழைத்தார்.

## ரொபர்ட் சாமர்ஸ் (1913-1916)



இவர் இலங்கையின் ஆளுநராகத் தெரிவாகுமுன் இங்கிலாந்தில் நிரந்தரச் செயலாளர் பதவியையும் 'பட்மர்' எனும் பதவியையும் வகித்திருக்கிறார். பாளி மொழி, பௌத்த மதம் ஆகியவற்றின்மீது அதிக விருப்பம் கொண்ட இவர் அவை பற்றிக் கூடிய விளக்கத்தையும் பெற்றிருந்தார். 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லிம் இனக்கலவரம் ஆரம்பமாகியது. இதன் காரணமாக, வடக்கையும் கிழக்கையும் தவிர, அனைத்துப் பிரதேசங்களிலும் 'மார்ஷல்லோ' யுத்த காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. கலகக்காரர்கள் அனைவரும் அரச துரோகிகள் எனக் கணிக்கப்பட்டு அவர்களைச் சிறையிடவும் சுடவும் படையினருக்கு ஆணை பிறப்பித்தார்.

## ஜோன் எண்டர்சன் (1916-1918)



ஏப்ரல் மாதம் 1916 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர், இந்நாட்டில் பரிவு காட்டிய ஒரே கருணைமிக்க ஆளுநராவார். இதன் காரணமாக, 1915 ஆம் ஆண்டு சிறைப்பிடிக்கப்பட்டிருந்த 800 சிங்களக் கைதிகளுக்கு விடுதலை வழங்கினார். இலங்கையருக்கு உயர் அரச உத்தியோகங்களை வழங்கவும் ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். பல்கலைக் கல்லூரியை நிறுவவும் உதவி புரிந்தார். 1918 ஆம் ஆண்டு நுவரெலியாவில் இவர் இயற்கை மரணமடைந்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:** ஜனாதிபதி தலைமையிலான குடியரசு.

**தாபிக்கப்பட்டமை:** விடுவிக்கப்பட்ட அடிமைகள் வாழ்வதற்காக அமெரிக்க காலனித்துவ சமூகத்தால் 1822 இல் உருவாக்கப்பட்டது. 1847 ஜூலை 26 இல் சுதந்திரம் அடைந்தது.









**தேசிய பெயர்:** லைபீரிய குடியரசு (Republic of Liberia).

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஜூலை 26.

**அதிபர்** (2006): எலன்-ஜோன்சன்-சேர்லீஃப்.

**உப அதிபர்** (2006): ஜோசப் போகாய்.

## புவியியல்

மேற்காபிரிக்காவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. மேற்காபிரிக்காவில் ஐரோப்பிய காலனி ஆதிக்கம் நடைபெறாத ஒரே நாடு. அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடற்பரப்பைக் கொண்டது. **வடமேற்கு**-சியெரா லியோன்; **வடக்கு**-கினியா; **கிழக்கு**-ஐவரி கோஸ்ட் ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் பெரும்பாலான பகுதி உயர் பீட்பூமிகளையும் வெப்பக்காடுகளையும் கொண்டுள்ளதுடன், கரையோரப் பகுதி சமவெளிகளைக் கொண்டது. வடகிழக்குப் பகுதியில் உயரம் குறைந்த மலைகள் காணப்படுகின்றன. மனோ, காவல்லா, லோஃபா, சென்.போல்,. சென்.ஜோன் மற்றும் செஸ்டஸ் ஆகியன நாட்டின் முக்கிய நதிகளாகும். இவற்றில் காவல்லா நதியானது நாட்டின் மிக நீளமான நதியாகும். இது 515 கி.மீற்றர் நீளமானது.




தேசிய இலச்சினை

**மொத்தப் பரப்பு:** 43,000 ச.மைல் (111,370 ச.கி.மீ); **மொத்த நிலப்பரப்பு:** 37,189 ச.மைல் (96,320 ச.கிமீ).

**பெரிய நகரம்:** மொன்ரோவியா.

**உயர் மலைச்சிகரம்:** நிம்பா மலை (1752 மீற்றர்); **தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.

**மக்கள் தொகை** (2010): 3,685,076.

**நாணயம்:** லைபீரிய டொலர்.

**மொழிகள்:** ஆங்கிலம் 20% (உத்தியோகபூர்வம்), சுமார் 20 இனக்குழுக்களின் மொழிகள்.

**இனக்குழுக்கள்:** உள்ளூர் ஆபிரிக்கப் பிரிவுகள் 95%, அமெரிக்க-லைபீரியன்ஸ் 2.5% (குடியேற்றப்பட்ட முன்னாள் அமெரிக்க அடிமைகள்), கொங்கோ மக்கள் 2.5% (குடியேற்றப்பட்ட முன்னாள் கரீபியன் தீவுகளின் அடிமைகள்).

**சமயங்கள்:** உள்ளூர் பாரம்பரிய மதங்கள் 40%, கிறிஸ்தவம் 40%, இஸ்லாம் 20%.

**எழுத்தறிவு** (2003): 58%.

**இணையத்தளக் குறியீடு:** .lr

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 231.



தலைநகரின் ஒருபக்கத் தோற்றம்





**தேசிய கீதம்**

All hail, Liberia, hail! (All hail!)
All hail, Liberia, hail! (All hail!)
This glorious land of liberty,
Shall long be ours….என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

ஆபிரிக்காவின் முதலாவது குடியரசான லைபீரியா 1822 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட அமெரிக்க அடிமைகளை மேற்கு ஆபிரிக்காவில் குடியேற்றுவதற்கு கிடைத்த உதவியின் பயனாகவே இது நடைபெற்றது. சுமார் 12,000 அடிமைகள் 40 வருடகால அடிமைத்தனத்துக்குப் பின்னர் இங்கு குடியேற்றப்பட்டனர். மொன்ரோவியா என்று அழைக்கப்பட்ட இந்தக் கொலனி 1847 ஆம் ஆண்டு லைபீரியா குடியரசு என பெயர் பெற்றது.







## காலநிலை

லைபீரியா, வெப்ப வலயத்திற்குட்பட்ட வெப்பக் கால நிலையைக்கொண்டுள்ளது. கோடைகாலத்தில் உஷ்ணம் நிறைந்த பகல் பொழுதும் குளிரான இரவுகளையும் அனுபவிக்கலாம்.

## கலாசாரம்

உள்ளூரிலேயே பல்வேறு இனக்குழுக்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் ஒரு நாடாகும். பாரம்பரிய மருத்துவம், கல்வி மற்றும் கலைத்துறை நிறுவனங்கள், கலாசாரத் திறன்கள், ஓவியம் மற்றும் கைப்பணித் திறன்கள் என்பன நிறைந்து காணப்படுகின்றன.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்-6,700. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): FM 7, SW2. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2001): 2; இணையத்தளப் பாவனையாளர்கள்: 500.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 490 கி.மீற்றர். **பெருந் தெருக்கள்** (1999): மொத்தம் 10,600 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 657 கி.மீ; செப்பனிடப்படாதவை 9,943 கி.மீ.

**துறையும் துறைமுகங்களும்** (2002): புக்சனன், கிரீன்வில்லி, ஹார்பெர், மொன்ரோவியா.

**விமான நிலையங்கள்:** 47.



மொன்ரோவியா துறைமுகம்

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 4%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** றப்பர், கோப்பி, கொக்கோ, கரும்பு, பாம் எண்ணெய், செம்மறி ஆடுகள், ஆடுகள். **கைத்தொழில்கள்:** றப்பர் தயாரிப்பு, பாம் எண்ணெய் தயாரிப்பு, பலகை, வைரக்கற்கள். **இயற்கை வளங்கள்:** மரங்கள், வைரம், தங்கம். **ஏற்றுமதி** (2006): றப்பர், பலகை, இரும்பு, வைரக்கற்கள், கோப்பி, கொக்கோ.

**இறக்குமதி** (2006): உற்பத்திப் பொருட்கள், போக்குவரத்து உதிரிப்பாகங்கள், ரசாயனங் கள், இயந்திரங்கள், எரிபொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): டென்மார்க்,ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து, தென்கொரியா, ஜப்பான், சிங்கப்பூர், க்ரோஷியா.










## பிரசித்தி பெற்ற இடங்கள்...

- பிசோ ஏரி
- கென்டேஜா கலாசார மத்தியநிலையம்
- சாபோ தேசிய பூங்கா
- கோர்டிலூ பூங்காவனம்
- பா-டவே நீர்வீழ்ச்சி
- லைபீரிய தேசிய நூதனசாலை
- மொன்ரோவிய சந்தை.

# லைபீரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இன்டர்நெட்' பயனும் பாதிப்பும்





உலகில் முன்னேறிய நாடுகளிலும் முன்னேறி வரும் நாடுகளிலும் அன்றாட தகவல் தொடர்புகளை எளிதாக்கும் வகையில் இன்டர்நெட் அமைந்துள்ளது. வயது வித்தியாசமின்றி அனைவரும் இதைப் பாவித்துப் பயனடைகின்றனர்.

எனினும், தவறான வழிமுறையில் இதனைப் பயன்படுத்தும்போது தீமைகள் ஏற்படவும் இடமுண்டு.

நகரங்களில் மட்டுமல்ல; கிராமங்களிலும்கூட இதற்குப் பெரு வரவேற்புக் கிடைத்திருக்கின்றது. காரணம் தொழில், தகவல் தொடர்புகளுக்கு மட்டுமன்றி; கல்வி விடயங்களுக்கும் இன்டர்நெட் அத்தியாவசியமான ஒன்றாக மாறியிருப்பதாகும். இதனால், இளம் பராயத்தினர் அதனோடு மிகவும் நெருக்கமாகி விடுகின்றனர்.



தொலைக்காட்சிகளில் விடயங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் விரும்பியவற்றைப் பார்க்க சீடி பிளேயர் தேவைப்படும். எனினும், இன்டர்நெட் அவ்வாறான முறையில் அமையாமல் எவற்றையும் உடனுக்குடன் நேரடியாகப் பார்வையிடும் வசதியுடன் அமைந்துள்ளது. இதனால், பல அரிய விடயங்களை மிக எளிதாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைப்பதானது இளந்தலைமுறையினருக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். அந்த வகையில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு இன்டர்நெட் அவசியம் எனக் கூறிக்கொண்டாலும் கற்றலுக்காக ஓரளவுக்கே இதனை அவர்கள் பயன்படுத்துகின்றனர். அவர்களில் பெரும்பாலானோரின் செயற்பாடுகள் உல்லாச, களியாட்ட, வினோத விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பதாகவே உள்ளது. இதனால், சிலர் பரீட்சையிலும் தோல்வியடைந்து விடுகின்றனர்.

இன்டர்நெட் கல்விக்கு அத்தியாவசியமானதே என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், புத்தகங்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சிகளால் அறிய முடியாத பல விடயதானங்களை இன்டர்நெட் குறுகிய காலத்தில் உடனடியாக முன் வைத்து விடும். எனினும், கற்றலுக்கு மட்டுமே இளம் பராயத்தினர் இதனை உபயோகப்படுத்துவர் என உத்தரவாதமளிக்க முடியாது. ஏனெனில், வகுப்பில் ஆசிரியர் முன்னிலையில் பாடத்தைப் படிக்கும் பிள்ளைகள் வீட்டில் எதையும் பார்க்கும் வாய்ப்புண்டு. அந்தவகையில் சிலவேளைகளில் களியாட்ட நிகழ்வுளோடு, வயதுக்கு மீறிய நிகழ்வுகளையும் பார்க்கும் வாய்ப்புண்டு.



தமது பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் கருதிப் பெற்றோர் இணையத்தளங்களைப் பார்வையிட அனுமதித்து விடுகின்றனர். எனினும், இதிலுள்ள ஐயம் என்னவெனில்,கட்டுப்பாடற்ற ஊடகத் தொடர்பு காரணமாக, பிள்ளைகள் சீர்பெறுமா? சீரழியுமா? என்பதேயாகும். தற்போது பல்வேறு இணையத்தள வலைப்பின்னல்கள் இருக்கின்றன. இவற்றின்மூலம் சிறுவர்கள் ஒழுக்கக் கேட்டுக்கு ஆளாகிவிடலாம். தெரியாத-அறியாத நண்பர்களால் அனுப்பப்படும் வரம்பு மீறிய ஈமெயில், புகைப்படங்கள் இளம் பராயத்தினரின் மனதைக் கெடுக்கலாம். வன்முறை மற்றும் விரசமான சாட்சிகள் இளஞ் சந்ததியினருக்குச் சீரழிவையும் ஒழுக்கக்கேட்டையும் ஏற்படுத்தலாம். எனவே, இது பற்றிப் பெரியோர் அக்கறை கொள்வது மிகமிக அவசியமானதாகும். அறியாத வயதில் பிள்ளைகள் எதையும் பரீட்சிக்க முற்படலாம். இவ்விடயத்தில் பெரியோரே முக்கிய கவனம் எடுப்பது காலத்தின் தேவையுமாகின்றது.



(ஈ)

# குறிப்பிட்ட வயதுக்குப் பின்னர் ஏன் வளர்ச்சி அடைவதில்லை?



மனிதனுடைய வளர்ச்சி என்பது ஓர் இயல்பான செயற்பாடாகும். தாவரங்கள், பிராணிகள், பறவைகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அவையும் மனிதனைப் போலவே வளர்ச்சி அடைகின்றன. இவை அனைத்தும் ஆரம்பநிலையில் இருந்தே வளர ஆரம்பிக்கின்றன. தாயின் கர்ப்பப்பையில் இருந்தே வளரத் தொடங்கிய கரு பிறந்த பின்னரும் தொடர்ந்து வளர்கின்றது. அந்த வகையில் பிறந்த குழந்தையொன்று சுமார் 50 செ.மீற்றர் வளர்ச்சியுடன் இருக்கும். ஆனால், 20 வருடங்கள் கழிந்த பின்னர் அதன் உயரமானது பிறந்தபொழுது இருந்ததைவிட, மூன்று மடங்கு அதிகமாக இருக்கும். 20-22 வயதை அடைந்த பின்னர் மனிதனின் வளர்ச்சிப்படி படிப்படியாக குறைவடைகின்றது.



அத்துடன், உடல் வளர்ச்சிக்கு புரதம் மிக இன்றியமையாததாகும். புரதத்தை மாமிசம், மீன், முட்டை, விதை, தானியங்கள், பழம், பால் போன்ற உணவுப் பொருட்களில் இருந்தே பெறுகிறோம். சமிபாட்டின்போது புரதங்கள், அமினோ அமிலமாக மாற்றப்படுகின்றன. இந்த அமினோ அமிலம் செல்களையும் திசுக்களையும் உண்டாக்குகின்றது. கல்சியம், மெக்னீசியம், பொஸ்பேட், சோடியம், பொட்டாசியம், இரும்பு போன்றவை உடல் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவை. புரதமும் தாதுக்களும் திசு, எலும்பு போன்றவற்றின் தோற்றத்திற்கு முக்கியமானவையாகும். மேலும், பழுதடைந்த செல்களும் திசுக்களும் புரதப்பொருட்களின் உதவியாலேயே புதுப்பிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட வயதுக்குப் பின்னர் தொடர்ந்து நாம் ஏன் வளர்வதில்லை? நம் உடலிலுள்ள நாளமில்லாச் சுரப்பிகள் உடலின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன. 'பிட்டியூட்டரி' சுரப்பி எலும்பின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்துகின்றது. பிறந்த குழந்தைக்கு தைமஸ் சுரப்பி மிகவும் பெரிதாக உள்ளது. ஆனால், பதினான்கு வயதிலிருந்து 'தைமஸ்' சுரப்பி சுருங்க ஆரம்பிக்கின்றது. அதே காலகட்டத்தில் பால் இனச்சுரப்பிகள் தோன்றி உடல் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றன. 22 வயதில் உடல் முழு வளர்ச்சியை அடைந்து பின்னர் உடல் வளர்ச்சி குறைய ஆரம்பிக்கின்றது. இதைத் தொடர்ந்து உடல் வளர்ச்சிக்கு முக்கியமான நாளமில்லாச் சுரப்பிகளின் செயற்பாடு குறைவடைகின்றன. 40 வயது வரை வளர்ச்சி மிகக் குறைவாகவே உள்ளது. இவ்வயதுக்குப் பின்னர் உடல் சுருங்க ஆரம்பிக்கின்றது. அந்தவகையில், பத்து வருடத்திற்கு ஒரு சென்ரி மீற்றர் வீதம் உடல் சுருங்குகின்றது. இச்சுருக்கம் பொதுவாக, எலும்பு இணைப்புகளிலும் மற்றும் முதுகெலும்புக் கோவையிலும் காணப்படுகிறது.



இவைதவிர, பருவ காலத்திற்கு ஏற்ப வளர்ச்சியின் அளவு வேறுபடுகின்றது. குழந்தைகள் கோடைகாலத்தில் வேகமாக வளர்கிறார்கள். அத்துடன், சத்துள்ள உணவும் வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வினாத்தாள் - I

பெயர்: ............................................... நேரம்: 45 நிமிடங்கள்

*01 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

✱ *1 ஆம், 2 ஆம் வினாக்களில் முதலாவது உருவுக்குப் பொருந்தக்கூடிய உருவை ஏனைய மூன்று உருக்களில் இருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

01. 

02. 

✱ *3 ஆம், 4 ஆம் விவரணத்தில் குறிப்பிட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.*


03.
- இடைவிடாது கத்தும்
- ஈரூடக வாழி
- நுரையீரல்களினால் சுவாசிக்கும்



04.
- எரிபொருள் தேவையின்மை
- உடற்பயிற்சியாக அமைதல்
- எளிய பராமரிப்பு



05. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.



✱ *6 ஆம், 7 ஆம் வினாக்களில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.*


06. கப்பலுக்குத் துறைமுகம் போன்று விமானத்திற்கு ...............................................

(1) கடல் (2) ஆகாயம் (3) விமான நிலையம்


07. சீனிக்கு இனிப்புப் போன்று எலுமிச்சம் பழத்திற்கு ...............................................


(1) உவர்ப்பு (2) புளிப்பு (3) கைப்பு

08. ஒரு வட்டவடிவமான கடதாசியை இரண்டு தடவைகள் மடித்து ஒரு பக்கத்தில் கூர்ங்கோண வடிவில் வெட்டி நீக்கிய பின்னர், அக்கடதாசியை விரித்தால் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைச் சரியாகக் காட்டும் படத்தின் இலக்கத்தின் கீழ்க் கோடிடுக.



✱ பின்வரும் உருக்கள் குறித்த ஓர் ஒழுங்கிற்கமைய ஆக்கப்பட்டுள்ளன. அவற்றின் போக்கினை அவதானித்து, நான்காவது உரு எவ்வாறு அமைய வேண்டுமென கீழ்வரும் விடைகளில் இருந்து தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.


09. 

10. 

✱ *11 ஆம், 12 ஆம் வினாக்களின் முதற்கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக சரியான எண்களைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.*

11. | 10×3+25=55 | (1) 7×5 (2) 6×5 (3) 15×3

12. | 100÷2-30=20 | (1) 20×3 (2) 75÷3 (3) 150÷3

13.  இந்த உருக்கள் மூலம் ஆக்கக்கூடிய திண்மம் எது?

(1) கனவுரு (2) நான்முகி (3) கூம்பகம்

14. இரு எண்களின் கூட்டுத்தொகை 60 ஆகும். அவ்விரு எண்களுக்கிடையிலான வித்தியாசம் 20 ஆகும். இவ்விரு எண்களும் எவை?

(1) 50, 10 (2) 40, 20 (3) 45, 15

✱ முதலாவது சொல் முடிந்ததும் இரண்டாவது சொல்லை ஆரம்பிக்கும் சொல்லை இனங்கண்டு அதன்கீழ்க் கோடிடுக.

15. பாட (....................) ஓரம் (1) நேரம் (2) வேளை (3) சாலை

16. கற் (.................) மண்டபம் (1) சாலை (2) கோயில் (3) குழி




✱ *பின்வரும் கோவையைப் பார்க்க. 10 △ 5=100 ✡ 2 இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது. நியமக் கணிதச் செய்கைகளுக்காக △ ✡ என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப;*

17. △ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(1) பெருக்கல் (2) கூட்டல் (3) வகுத்தல்

18. ✡ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

(1) கழித்தல் (2) வகுத்தல் (3) பெருக்கல்

✱ பின்வரும் சொற்களை வாசிக்க. இதற்கேற்ப 19 ஆம், 20 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

பருவம் பார்த்து ✚
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும்போது
△ பார்க்க வேண்டும்.


19. ✚ என்ற குறியீடு இருக்கும் இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(1) நீங்கள் (2) நாங்கள் (3) நீ

20. △ என்ற குறியீடு இருக்கும் இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


(1) பருவம் (2) மாரி (3) காலம்

21. இவ்வுருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது சரியாகத் தெரியும் உருவைத் தெரிவு செய்து, அதன்கீழ்க் கோடிடுக.



22.  இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கையைத் தெரிவு செய்க.


(1) 7 (2) 9 (3) 10


23. 

புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

(1) 30 (2) 42 (3) 24

24. A இற்குத் தென்கிழக்குத் திசையில் B காணப்படுகிறது. இதனைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




25. 


'?' இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

(1) 1021 (2) 1101 (3) 1211

✱ *உருக்களை அவதானித்து 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*




26. புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண் யாது?

(1) 4 (2) 15 (3) 100

27. ✚ இக்குறியீட்டில் வரவேண்டிய எண் யாது?

(1) 64 (2) 15 (3) 56

✱ *எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக.*


28. | 223 | → | 334 | → | 445 | → | 556 | → ................ (1) 567 (2) 667 (3) 665

29.

```
  A B C
+ B C C
  9 7 6
```

இங்கு C, B, A என்னும் ஆங்கில எழுத்துக்களின் பெறுமானங்களை இனங்கண்டு சரியான விடையின்கீழ்க் கோடிடுக.

(1) 5 4 3 (2) 3 4 5 (3) 3 5 4

30. 

இந்தக் கடதாசி அட்டையை மடித்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியில் 2 என்னும் இலக்கத்திற்கு எதிராக இருக்கும் இலக்கம் யாது?

(1) 6 (2) 5 (3) 4

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்தினால் பதவியை இரண்டாம் முறை நாட்டிற்குக் கொண்டுவந்த ஆண்டகை

**யேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழும்பொழுது அவரால் தெரிவு செய்யப்பட்ட பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் இருந்தார்கள். அவர்களில் தலைவராக புனித பேதுரு என அழைக்கப்படும் புனித இராயப்பரை யேசு தெரிவு செய்தார் என பரிசுத்த வேதாகமத்தில் (பைபிள்) குறிப்பிட்டுள்ளது. யேசு கிறிஸ்து குறித்து இந்த அப்போஸ்தலர் கொண்டிருந்த விசுவாசத்தின் அடிப்படையிலேயே பேதுருவை தலைவராக யேசு தெரிவு செய்தார் என பரிசுத்த வேதாகமம் மேலும் தெரிவிக்கின்றது**



கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை

## கர்தினால் பதவி

யேசு கிறிஸ்து பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி, மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்'' என்று கேட்டார்.

அதற்கு அவர்கள், ''சிலர் உம்மை யோவான் ஸ்நானகன் என்றும் சிலர் எலியா என்றும் வேறு சிலர் ஏரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்'' என்றார்கள்.

அப்பொழுது அவர், ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டார்.

சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றார்.

யேசு அவரை நோக்கி, ''நீர் பாக்கிய வான். மாமிசமும் இரத்தமும் இதை உமக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்தில் இருக்கிற என் பிதா இதை உமக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உமக்கு சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, பரலோக ராச்சியத்தின் திறவுகோள்களை நான் உமக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுவது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்'' என்றார். - *புனித மத்தேயு 16 ஆம் அதிகாரம் 13-19 வசனம்*



மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு 16 ஆவது ஆசீர்வாதப்பர் பாப்பரசர், கர்தினால் பதவியை உத்தியோகபூர்வமாக வழங்குகின்றார்

இவ்வாறு அப்போஸ்தலராகிய புனித இராயப்பரிடம் சபையின் அதிகாரத்தை கையளித்தபின் அன்று முதல் இன்று வரை கிறிஸ்துவுக்குப் பதிலாக சபையை தலைமை தாங்கி வழி நடத்தும் தலைவராக பரிசுத்த பாப்பரசர் எனும் திருத்தந்தை திகழ்கின்றார் எனக் கருதப்படுகின்றது.

அப்போஸ்தலரான புனித இராயப்பரின் பின் பரிசுத்த பாப்பரசராக லீனஸ் தெரிவு செய்யப்பட்டார். தற்போதைய கத்தோலிக்க திருச்சபையின் ஆன்மீகத் தலைவராக வழிநடத்தும் 16 ஆசீர்வாதப்பர் எனும் பெனடிக் திருத்தந்தை (பாப்பரசர்) இப்பதவியைப் பெற்ற 265 ஆவது பாப்பரசராவார்.

கர்தினால் சபையின் உறுப்பினர்களாலேயே பாப்பரசர் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றார். அத்தகைய கர்தினாலாக பேராயர் ஒருவரை நியமிப்பது பாப்பரசர் அவர்களே. பாப்பரசரின் செயற்பாடுகள் அனைத்திற்கும் பொறுப்பு வாய்ந்த பங்குதாரர்களாகவும் பாப்பரசரின் சகல நடவடிக்கைகளிலும் மிக நெருங்கிய குழுவாகவும் திகழ்வது இந்த கர்தினால் சபையாகும். இந்த கர்தினால் சபையினர் திருச்சபையினுள் கொண்டுள்ள ஐக்கியமானது மென்மேலும் பலத்தை உருவாக்க உதவும். அத்தகைய செயற்றிட்டங்களுக்கு பாப்பரசருக்கு உதவுவதும் அவரோடு ஒன்றிணைந்து செயற்படுவதும் திருச்சபையை பலப்படுத்தக் காரணமாக அமைகின்றது. அதுமாத்திரமன்றி, அடுத்த பாப்பரசரைத் தெரிவு செய்வதும் இந்த கர்தினால் சபையே என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, பாப்பரசராக ஒருவர் தெரிவாவது இந்த கர்தினால் சபையைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்முறை 24 கர்தினால்மார்கள் நியமிக்கப்பட்டனர். தற்போது உள்ளவர்களுக்கு மேலதிகமாகவே இந்த 24 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் அமெரிக்காவில் இருவரும், ஆபிரிக்காவில் நால்வரும், ஐரோப்பாவில் பதினைந்து பேரும், தெரிவாகினர். ஐரோப்பியரில் பத்துப் பேர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களைத் தவிர, லத்தீன் அமெரிக்காவில் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். ஆசியாக் கண்டத்தில் இருந்து தெரிவானவரே இலங்கையைச் சேர்ந்த பேராயர் அருட்திரு.மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள். எமது நாட்டிற்கு இச்சந்தர்ப்பம் இரண்டாம் முறையாகக் கிடைத்துள்ளது. இதற்கு முன் முன்னாள் பேராயர் அருட்திரு.தோமஸ் குரே அவர்கள் கர்தினாலாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். கர்தினாலாக நியமிக்கப்பட்ட பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு 16 ஆம் ஆசீர்வாதப்பர் பாப்பரசரின் கையால் 'பிரெட்டா' என அழைக்கப்படும் தொப்பி ஒன்றும் கடந்த 20 ஆம் திகதி அணியப்பட்டது. இவ்வாறு கர்தினாலாக நியமிக்கப்படும் பேராயர்கள் பரிசுத்த பாப்பரசரின் கடமைகளில் பங்குபற்றும்பொருட்டு இடையிடையே வத்திக்கானுக்கு அழைக்கப்படுவர். எனவே, இத்தகைய முக்கியத்துவம் மிக்க பதவிக்கு இலங்கையிலிருந்து ஒருவர் தெரிவாகியுள்ளமை இலங்கைவாழ் மக்களுக்குக் கிடைக்கும் கௌரவமாகவே கருதப்படுகின்றது.





வத்திக்கான் வளாகம்



பாப்பரசரும் புதிய கர்தினால்மாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகராலயம் (ஜெனீவா)



**உலகில் அனைத்து மனிதனும் சமமாகவே பிறக்கின்றான். அனைவரும் ச**
**சமத்துவம் உடையவர்கள். ஒவ்வொருவரும் நாகரிகமாக வாழும் உரிமை**
**தேவையான வேலை உரிமைகளையும் பெற்றுள்ளனர். உலகின் எப்பகுதிச்**
**உரிமை பெற்றுள்ளதோடு, அனைவரும் தமது பண்பாடு, மரபுகளின்படி வா**



ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மாநாடொன்றின் போது...



# மனித உரிமைகள்

## டிசம்பர் 10 மனித

மனிதகுல அடிப்படை உரிமைகளே 17ஆம் நூற்றாண்டில் 'இயற்கை உரிமைகள்' என விவரிக்கப்படட்து. அவை சட்ட வடிவம் பெற்று 18 ஆம் நூற்றாண்டில் 'மனிதனின் உரிமைகள்' என அழைக்கப்பட்டன. பின்னர் அவை படிப்படியாக தேசிய அரசியலமைப்புச் சட்டங்களில் எழுதப்பட்டன. 1789 ஆம் ஆண்டு பிரான்ஸ் மனிதர்-குடிமகன் உரிமைகள் பிரகடனமும் 1791 ஆம் ஆண்டு அமெரிக்க உரிமைகள் பிரகடனமும் இதற்கு சில உதாரணங்களாகும். 19 ஆம் நூற்றாண்டில் பல சுதந்திர நாடுகள் இக்கொள்கைகளை ஏற்றுக் கொண்டன. பின்னர் மனிதனின் சமூக, பொருளாதார உரிமைகள்கூட அங்கீ கரிக்கப்பட்டன. இவ்வுரிமைகளையே இன்று நாம் 'மனித உரிமைகள்' என்று அழைக்கின்றோம்.

### மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்

முற்காலங்களில் உலகின் அநேகமான பகுதிகளில் மனித உரிமைகள் பல்வேறு காரணங்களால் தடுக்கப்பட்டன அல்லது பறிக்கப் பட்டன. 20 ஆம் நூற்றாண்டில் குடியேற்றக் கொள்கை, பேரரசுக் கொள்கை, முதலாம் உலகப்போர், சர்வாதிகார அரசுகளின் எழுச்சி, நாசிசம், பாசிசம், இரண்டாம் உலகப்போர் மற்றும் இனக்கொள்கைகள் போன்றவற்றால் மனிதனின் அடிப்படையான சில உரிமைகள்கூட மிகக் கொடுமையான முறையில் மீறப்பட்டுள் ளன. அதனால், மனித குலத்தின் உரிமைகளை ஒருசில நாடுகளின் அரசுகள் மட்டுமே பாதுகாத் திட இயலாது என்பது விளங்கியது. எனவே, சர்வதேச அங்கமான ஐக்கிய நாடுகள் சபை அப்பணியை மேற்கொள்ளத் தொடங்கியது.

### 1948 ஆம் ஆண்டு ஐ.நா.வின் மனித உரிமைகள் பிரகடனம்

ஐ.நா சபையானது 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி நிறுவப்பட்டது. அப்போது, இந்நிறுவனத்தில் மனித உரிமை களை வரையறை செய்ய பொருளாதார சமூகக் குழுவின்கீழ் ஓர் ஆணையகம் அமைக்கப்பட் டது. அந்த ஆணையகம் சர்வதேச மனித உரிமைகள் மசோதாவை வரைந்தது. அதனை ஐ.நா.வின் பொதுச்சபை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ஏற்றுக்கொண்டது. அது ஐ.நா.வின் 'மனித உரிமைகள் பொதுப் பிரகடனம்' எனப்பட்டது. அப்பிரகடனத்தில் 30 விதிகள் உள்ளன. அதன் முகவுரை 'மனித குடும்பத்தின் அனைத்து உறுப்பினர் களினது கண்ணியத்தையும் மறுக்க முடியாத சம உரிமை களையும் குறிப்பிடுவதோடு, அப்பிரகடனத்தின் விதிகள் மனித உரிமைகளை விவரிப் பதாக உள்ளன.



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலச்சினை

மனித உரிமைகள் பிரகடனம் ஆனது மனித உரிமைகளின் பொதுத்தன்மையினை வெளிப் படுத்துகின்றது. அனைத்து மனிதர் களும் எத்தகைய வேற்றுமைகளும் இன்றி அப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை களைப் பெறத் தகுதியுடையவர்கள். இந்த 30 விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை பெருவாரியாக குடி யியல், அரசியல் உரிமைகள் மற்றும் பொரு ளாதார,சமூக, பண்பாட்டு உரிமைகள் என இரு வகைகளா கப் பிரிக் கலாம்.

பிரான்ஸ் மனிதர்-குடிமகன் உரிமைகள் பிரகடனம்



### குடியியல், அரசியல் உரிமைகள்

குடியியல், அரசியல் உரிமைகள் நவீன கால மக்களாட்சியுடன் மிக நெருங்கிய தொடர்பு டையவை. இவ்வுரிமைகளைப் பாதுகாத்தல் மக்களாட்சியின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இவ்வுரிமைகளாவன:

01. வாழ்க்கை, சுதந்திரம், தனிமனித பாதுகாப்பு உரிமைகள்.
02. அடிமைத்தனம், சித்திரவதையிலிருந்து விடுதலை.
03. சட்டத்தின் முன் சமத்துவம்.
04. சட்டத்துக்குப் புறம்பான கைது, சிறையிலிடுதல் அல்லது நாடு கடத்தலுக்கு எதிரான பாதுகாப்பு.
05. நியாயமான விசாரணை உரிமை.
06. சொத்துரிமை.
07. அரசியலில் ஈடுபடும் உரிமை.
08. திருமண உரிமை.
09. சிந்தனை, எண்ணம், சமயம், கருத்து, பேச்சு போன்ற அடிப்படைச் சுதந்திரம்.
10. தனது நாட்டு அரசியலில் நேரிடையாகவோ அல்லது சுதந்திரமாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின் மூலமோ பங்கேற்கும்உரிமை போன்றவைகளாகும்.




மனித உரிமை மீறலுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று

தரம் 9, 10, 11 மற்றும் உயர் பாடத்திட்டத்திற்கு உட்பட்

### பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள்

மனிதன் வெறும் பேச்சு, நம்பிக்கைச் சுதந்திரங் களுடன் மட்டும் வாழ்ந்து விடுவதில்லை. அவன் அச்சத்திலிருந்தும் தேவையிலிருந்தும் விடுதலை பெற வேண்டும். அதனால்தான் ஐ.நா. சபை பொருளாதார, சமூக, பண்பாட்டு, உரிமைகளுக் கும் சம நிலையினைத் தந்துள்ளது.

1. வேலை உரிமை
2. சம உழைப்பிற்கு சம ஊதிய உரிமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**...தம் கண்ணியத்திலும் மதிப்பிலும் ...மையையும் தாம் வாழ்வதற்குத் ...ததிக்கு வேண்டுமானாலும் செல்லும் ... வாழும் உரிமை படைத்தவர்கள்**

3. தொழிற்சங்கம் அமைத்து அதில் சேரும் உரிமை
4. போதுமான வாழ்க்கைத் தரத்தினைப் பெறும் உரிமை
5. கல்வி உரிமை
6. பண்பாட்டு வாழ்க்கையில் தலையீடு இன்றிப் பங்கு பெறும் உரிமை என்பன இதில் அடங்கும்.

### மனித உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன?

மனித உரிமைகள் ஒரு பொதுப் பிரகடனமாகும். இதை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டியது



# ...ன்றால் என்ன?



## ...ித உரிமைகள் தினம்

...டயர் தர ...பட்டது




அவசியமாகின்றது. 1948 ஆம் ஆண்டு இப்பிரகடனத்தை ஐ.நா. சபை ஏற்றுக்கொண்ட போது, அச்சபையில் 58 நாடுகள் அங்கத்துவம் வகித்தன. 1966 ஆம் ஆண்டு அப்பிரகடனத்தின் பொருள் பெரு விளக்கம் பெற்றது. அந்த ஆண்டு ஐ.நா. சபை இரு ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்டது. அவையாவன;

1. **பொருளாதார-சமூக-பண்பாட்டு உரிமைகள் மீதான பண்ணாட்டு ஒப்பந்தம்** (ICESCR)
2. **குடியியல்-அரசியல் உரிமைகள் மீதான பண்ணாட்டு ஒப்பந்தம்** (ICCPR)

உறுப்பு நாடுகள் இவற்றை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டன. 1996 ஆம் ஆண்டில் உறுப்பினர்களாக இருந்த 185 நாடுகளில் 129 நாடுகள் இந்த ஒப்பந்தங்களை ஏற்று ஒப்புதல் வழங்கின. ஒப்புதல் வழங்கிய நாடுகள் சட்டபூர்வமாக இந்த ஒப்பந்தங்களைக் கடைப்பிடிக்க கடமைப்பட்டவை. அதனால், அந்நாடுகள் மனித உரிமைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவும் கடமைப்பட்டவை. அவையே மனித உரிமைகளைப் பாதுகாப்பன. மனித உரிமைகளைத் தமது நாட்டில் பாதுகாத்தல் ஐ.நா.சபையின் அனைத்து உறுப்பு நாடுகளினதும் பொறுப்பாகும். அந்நாடுகளே, மனித உரிமைகளைப் போற்றவும் ஊக்குவித்திடவும் வேண்டும். அதேபோல் அந்நாடுகளே, மனித உரிமைகள் மீறலையும் தடுத்திடல் வேண்டும். உறுப்பு நாடுகள் மனித உரிமைகளைப் பாதுகாத்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அந்நாடுகள் சில வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துதல், பாதுகாத்தல் குறித்து அந்நாடுகள் ஐ.நா. சபைக்கு பருவ அறிக்கைகளையும் அனுப்பி வருகின்றன.

**எஸ்.எம்.எம்...**

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பிரதான அமைப்பு 'இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு' ஆகும். இந்த ஆணைக்குழு நாட்டின் நாலாபுறங்களிலும் பிராந்திய அலுவலகங்களை நிறுவித் தனது சேவைகளை ஆற்றிவருகின்றது. உரிமைகள் என்பது 'மனிதன் தனது தனிப்பட்ட வாழ்க்கையைப் பூரணப்படுத்திக்கொள்வதற்காக தேவைப்படும் நிபந்தனைத் தொகுதியாகும்'.

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டத்தினால் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களில் மிகவும் விசேடமாக காணப்படுவது, மனித உரிமைகளை மீறியமை தொடர்பாகக் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்தறிந்து, விதந்துரையை சமர்ப்பிப்பதாகும். மேலும், மனித உரிமைகள் பற்றிய அறிவின் மேம்பாட்டிற்கும் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்களைத் தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு விதந்துரைகளைச் சமர்ப்பிப்பது இக்குழுவின் ஏனைய முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இலங்கையில் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு, 10 பிராந்திய நிலையங்களும் ஓர் உப பிராந்திய நிலையமும் நிறுவப்பட்டுள்ளது.

### இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சில...

1. அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து புலனாய்வு செய்தலும் விசாரணை மேற்கொள்ளலும்.
2. நீதிமன்றத்தின் அனுமதியுடன் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் தலையீடு செய்தல்.
3. தடுப்பு நிலையங்களிற்கு கிரமமாக செல்வதன் மூலம் தடுப்புக் காவலில் உள்ளவர்களின் நலன்களைக் கண்காணித்தல்.
4. மனித உரிமை விடயங்களைப் பற்றி ஆய்வு செய்தலும் மனித உரிமைகள் பற்றிப் பொது மக்களுக்கு அறிவூட்டும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலும்.
5. உயர் நீதிமன்றத்தினால் ஏதேனும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறப்படின், அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்.
6. அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அனைத்துக் கருமங்களையும் செய்தல்.

### முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்

நாட்டு மக்களின் உரிமைகளையும் உரிமை மீறல்களையும் நீதி, நியாயத்தின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு தன்னை அர்ப்பணித்துள்ள நிலையில், நியாயம் கிடைக்க வேண்டுமெனில், பின்வரும் முறையீட்டு நடைமுறைகளின் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது மீறப்படவுள்ள நிலைமைகளில் முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க முடியும்.



### முறைப்பாடொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

1. எவ்வகையான உரிமைகள் மீறப்பட்டுள்ளன?
2. எவருடைய உரிமைகள் மீறப்பட்டுள்ளன?
3. மீறல் அல்லது மீறலுக்குப் பொறுப்பானவர்கள் யாவர்?
4. அவ்வுரிமைகள் எவ்வகையில் மீறப்பட்டுள்ளன?
5. எங்கே, எப்போது மீறல் நடந்தது.
6. முறைப்பாட்டாளர் கோருகின்ற நிவாரணம் என்ன?

அத்துடன், சம்பந்தப்பட்ட மீறல்கள் நடந்ததிலிருந்து மூன்று மாதத்திற்குள் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எனினும், காலவரையறையைக் கருத்திற்கொள்ளாது முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு உள்ளது.

எனவே, பாதிப்புக்குள்ளான நபரோ அல்லது குழுவோ அல்லது இவர்கள் சார்பாக செயற்படும் நபர் அல்லது குழு முறைப்பாடொன்றினை மேற்கொள்ளலாம். அதேவேளை, ஆணைக்குழுவினால் அடிப்படை உரிமை மீறல்கள் பற்றி சுயமாக புலனாய்வு செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் முடியும்.

தீர்வு ஒன்றினை நாடி சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் ஆணைக்குள் உள்ளடங்காவிட்டால் முறைப்பாடுகள் நிராகரிக்கப்படும். ஆணைக்குழுவின் ஆணைக்குள் உள்ளடங்குமாயின், வழக்கினைக் கொண்டு நடத்தத் தேவையான தேவைப்பாடுகள் போதுமானதாக உள்ளனவா? அல்லது இல்லையா? என்பதனைத் தீர்மானிக்க பூர்வாங்க விசாரணை ஒன்று நடாத்தப்படும்.

**-எஸ்.எல்.மன்சூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை தந்த உறவு



அன்று சுசியும் அபியும் பாடசாலை விட்டு வீடு செல்ல பஸ்ஸிற்காகக் காத்திருந்தார்கள். நேரம் சென்றதே தவிர, பஸ் வருவதாகத் தெரியவில்லை. அப்போது தெளிந்திருந்த வானத்தை எங்கிருந்தோ வந்த கரு முகில்கள் மூடிக்கொண்டன. மழை பெய்யப் போவதை உணர்ந்த சுசி, அபியிடம் "வரும்போது நான், குடையை எடுத்து வரவில்லை. என்ன பண்றதுனு தெரியல. உன் குடை எங்கே?" என வினவினாள்.

"சுசி, எங்கம்மா என் குடையைத்தான் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார்கள்" என பதில் கூறினாள். அபி, "என்ன நீயும் குடை கொண்டு வரவில்லையா? அப்ப ரெண்டு பேரும் நனைய வேண்டியதுதான்" என்றாள் சுசி.

திடீரென மழை கொட்ட ஆரம்பித்தது. இருவரும் அருகிலிருந்த கடைப்பக்கமாகச் சென்று ஒதுங்கினார்கள். மழை குறைவதாக இல்லை. இருவரது வீடுகளும் பாடசாலையிலிருந்து வெகுதூரத்தில் இருந்தது.

"சுசி நாம் நடந்து போவோம். பஸ் வருமோ தெரியாது" என்றாள் அபி.

"இந்த மழையில் என்னால் நடந்து வர முடியாது. கொஞ்சம் பொறு பஸ் வரும்" என்று கூறினாள் சுசி.

"நேரத்தைப் பார்த்த அபி "நேரம் இப்ப 3.30. வீட்டில் தேடுவாங்க. நீ இப்படியே நின்று பஸ் வருமா என்று பாரு. நான் போறேன்" என்றவாறு நடந்தாள். "நில் நானும் வாறேன்" வேறு வழியின்றி சுசியும் நடந்தாள்.

சிறிது தூரம் நடந்து சென்றதும் இருவரும் நன்றாக மழையில் நனைந்து விட்டார்கள். சீருடை முழுவதும் சேறு. பாதையில் செல்வோர் இவர்களைப் பார்த்து நகைத்தனர். சுசியால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. திடீரென யாரோ இவர்கள் நனையாமல் குடையைப் பிடித்தார்கள். நிமிர்ந்து பார்த்து அதிர்ச்சியடைந்தார்கள் அபியும் சுசியும். ஆம்! குடை பிடித்தது வேறு யாருமில்லை. சுசியினதும் அபியினதும் விளையாட்டுப் பொருள் போன்ற மாலாதான். மாலாவை சுசியும் அபியும் பாடசாலையில் எவ்வளவோ கிண்டல்கள் செய்து அவமானப்படுத்தியுள்ளார்கள். என்றாலும் மாலா பொறுமையுடன் இருப்பாள்.

அவர்களை நோக்கி மாலா "இந்தக் குடையைப் பிடியுங்கள். நன்றாக நனைந்து விட்டீர்கள். வாருங்கள் நம்ம வீட்டிற்குப் போய்மழை நின்றதும் போகலாம்" என்றாள். சுசியாலும் அபியாலும் அவள் பேச்சை மறுக்க முடியவில்லை. இருவரும் அவள் வீட்டிற்குச் சென்றார்கள். மாலா அவர்களை அன்புடன் உபசரித்ததோடு, தன் அம்மாவிடம் சென்று தன் தோழிகளை அழைத்து வந்திருப்பதைக் கூறினாள். மாலாவின் அம்மா மூவருக்கும் உணவுப் பரிமாறி அன்புடன் உண்ணச் சொன்னார்.

சுசியாலும் அபியாலும் ஒன்றுமே பேச முடியவில்லை. "என்ன இருவரும் பேச மாட்டீர்களா?" வினவினாள் மாலா. பதிலுக்கு அபி, "எங்களை மன்னிச்சிடு மாலா நாங்க உன்னை எவ்வளவோ அவமானப்படுத்தியுள்ளோம். நீ அவையொன்றையும் பொருட்படுத்தாமல் இப்படிப்பட்ட நேரத்தில் உதவினாயே... உன் உதவியை நாங்கள் மறக்கவே மாட்டோம்" என்றாள்.

"நீங்க நினைக்கிற மாதிரி நான் அவை ஒன்றையும் மனசுல வச்சுக்கவே இல்லை. இப்போது இந்த மழைக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும். இந்த மழை பெய்யாமல் இருந்தால் இப்படி எல்லாம் நடந்திருக்குமா?" என்றாள் மாலா. அவள் கூறியதைக் கேட்ட சுசியும் அபியும் மழைக்கு நன்றி கூறினார்கள்.

*எம்.என்.எஃப்.சுமையா,*
*தரம் - 9, தும்பளதெனிய மு.வித்., வரகாப்பொலை.*

# ஆசிரியப்பணி மூலம் சாதிக்க விரும்புவது



எமது வாழ்வில் வாழ்வாங்கு வாழ எமது எதிர்காலம் சிறப்புடன் அமைய வேண்டுமென மனதினுள் கோட்டை கட்டி வைத்துள்ளோம். அந்த மனக்கோட்டை மண் கோட்டையாகி விடாமல் இருக்க, எமது எதிர்கால வாழ்வை சுபீட்சமாக்கிக் கொள்ள, எமது வாழ்வின் உயர்நாடியாகத் தொழிற்பட்டுக் கொண்டிருப்பன லட்சியங்களாகும். இவை எமது வருங்கால வாழ்வைத் துல்லியமாக எடைபோடக் கூடியன எனலாம்.

அந்தவகையில் நான் எனது லட்சியமாக சமூகத்தைக் கட்டியெழுப்பக்கூடிய ஆசிரியத் தொழிலுக்கு என்னை அர்ப்பணிக்க பெருவிருப்புக் கொண்டுள்ளேன். நான் எனது லட்சியத்தை அடைவதற்கு மனதில் முளையரும்புகளை இட்டு அவற்றை விழுதுகள் நிறைந்ததோர் அழகிய விருட்சமாக மாற்றியமைக்க முயன்று கொண்டிருக்கின்றேன்.

எனது விடாமுயற்சியினால் எதிர்காலத்தில் இம்மகத்துவம்மிக்க சேவையை மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிட்டினால், மாணாக்கர்களிடையே தற்போது அருகி வரும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதற்கு உரிய வழி கோலுவேன். எனது பாடசாலைக் கற்பித்தல் தவிர்ந்த, ஏனைய ஒழுக்க சீலங்களையும் மாணவர்களின் பிஞ்சு நெஞ்சங்களுக்குள் புகுத்தி விடுவேன்.




அத்தோடு, கல்வியில் இம்மியளவும் நாட்டமின்றி வீணே ஊர் சுற்றி அலைந்து, தம் வாழ்வைப் பயங்கரப் புதைகுழிக்குள் வீழ்த்துவதற்குத் தயாராகிக்கொண்டிருக்கும் சிறுவர்களைச் சந்தித்து, அவர்களுக்கும் கல்வி தரும் கண்ணியத்தை உணர்த்துவேன். மேலும், ஏழ்மை எனும் கோரப்பிடிக்குள் சிக்குண்டு கற்க முடியாமல் இருக்கும் மாணவர்களுக்கும் இலவசமாகக் கல்வி போதிப்பேன். எனது லட்சியத்தை முற்று முழுதாகக் கல்வி எனும் அரும்பணிக்காக அர்ப்பணிப்பேன்.

எனது லட்சியத்தை அடைய நித்தமும் இறைவனிடம் வரம் கேட்கிறேன். அதன்மூலம் சிறப்பானதொரு வையகத்தை உருவாக்குவதே எனது லட்சியமாகும்.

நி.ப.அய்மா,கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

## பல நாட்டுப் பொன்மொழிகள்

- உனக்காகப் பொய் சொல்பவன், உனக்கு எதிராகவும் பொய் சொல்வான்.
  *-அமெரிக்கா*
- கெட்ட தந்தைகூட, கெட்ட மகனை விரும்புவதில்லை.
  *-சீனா*
- தீய வழியில் வந்தது. தீய வழியிலேயே போய்விடும்.
  *-இங்கிலாந்து*
- இறந்து கிடக்கும் சிங்கத்தைவிட, உயிருள்ள சுண்டெலியே மேலானதாகும்.
  *-ரஷ்யா*
- உனக்குப் பகை வேண்டுமா? அப்படியானால் ஒருவருக்குக் கொடுத்த கடனைத் திருப்பிக்கேள்
  *-பிரான்ஸ்*
- அதிர்ஷ்டமில்லாதவன் உப்பு விற்றால் மழை பெய்கிறது. மா விற்றால் காற்றடிக்கிறது.
  *-ஜப்பான்*
- மௌனம் என்ற மரத்தில் அமைதி என்கிற கனி தொங்குகிறது.
  *-அரேபியா*

கே.ஸ்கெனோமா, தரம் - 6.



# உணவு உட்கொண்ட பின் படிக்கலாமா?

பசியுடன் அல்லது உணவருந்திய மறுதிமிடம் படிக்கக்கூடாது. இந்த இரண்டு சமயங்களிலும் கற்கும்போது அது மூளையில் நன்கு பதியாது. காரணம், பசி வேதனையானது. பசி வந்தால் மனத்தை ஓரிடத்தில் நிலைநிறுத்த முடியாது. சிந்திக்கத் தொடங்கினால் பசி அச்சிந்தனையைப் பாழாக்கி விடும். அதுபோலவே, உணவு உண்டபின் படிக்கக்கூடாது என்பதும். உணவு உண்டதும் இரைப்பை உணவை ஜீரணிக்கச் செய்யும் வேலையைத் தொடங்குகின்றது. அப்பொழுது அதிகளவு இரத்தம் இரைப்பை தசைகளுக்கு வந்து சேரும்.

எனவே, உணவு உண்டதும் படிக்கவோ அல்லது சிந்திக்கவோ தொடங்கினால் மூளைக்கு அதிக இரத்தம் செல்லமுடியாமல் மூளையின் செயற்பாடுகளில் தாமதம் ஏற்படும். நாமாக அதைத் தட்டி எழுப்பி வேலை செய்யத் தூண்டினால் வயிற்றுக்குப்போன இரத்தம் மூளைக்கு வந்து விடும். இதனால், ஜீரண வேலைகள் தடைப்பட்டுப் போகும். இது உடல் நலத்திற்கு நல்லதல்ல. இதையும் மீறிக் கட்டாயப் படுத்தி வேலை வாங்கினால் மூளை உரிய வகையில் தொழிற்படாது. அதனால், படிக்கும் படிப்பும் பயனின்றிப் போகும்.

எச்.எம்.அஸ்லம், ஓட்டமாவடி தேசிய பாட., ஓட்டமாவடி.

# மழையால் வளம்



நில வானம் இருண்டது
நெடிய மேகம் திரண்டது
மேளம் போல இடித்தது
மின்னல் வானில் வெடித்தது.

சீறிக் காற்றும் எழுந்தது
சேர்ந்து மழையும் பொழிந்தது.
பாரிய மரம் வீழ்ந்தது
பாய்ந்து வெள்ளம் வடிந்தது.

ஆறாய் நீரும் பெருகியே
அருவியாகப் பாய்ந்தது
சேறாய் வயலும் நிறைந்தது
செந்நெல் பூத்துச் சிரித்தது

செடிகள் நன்கு தழைத்தன
வளமும் வாழ்வும் செழித்தன
இருண்ட வாழ்வு அகன்றது
எல்லோர் மனமும் குளிர்ந்தது

எஸ்.ராதிகா, தரம்-6,
விக்னேஸ்வரா த.ம.வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது வெளிநாட்டு ஆளுநர்கள்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வில்லியம் ஹென்றி மெனிங் (1918-1925)



1918 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட இவர் இந்நாட்டில் அப்போது காணப்பட்ட அமைதியின் மையைத் தணிப்பதற்கே பதவியேற்றார். கிராம வாசிகளின் திறமையான பிள்ளைகளைத் தெரிவு செய்து புலமைப்பரிசில் வழங்கி ரோயல் கல்லூரி யில் படிக்க வைக்கவும் ஏற்பாடு செய்தார். பாடத் திட்டத்தை மாற்றி அறிவுத் திறனோடு, தொழில் நுட்பத்துக்கும் வழிவகுத்தார். அத்தோடு, கொலன் னாவையில் மண்ணெண்ணெய் தாங்கியை அமைத்து கொழும்பிலிருந்து கொலன்னாவைக்கு மண்ணெண்ணெய் யைக் கொண்டு செல்ல ரயில் பாதையை அமைத்தார்.

## ஹியூ கிளிபர்ட் (1925-1927)



இவர் பொறுப்பேற்குமுன் ஹென்ரி மெக்கலம் நிர்வாகம் செய்த காலத்தில் செயலாளராகப் பணி புரிந்துள்ளார். 1925 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் ஆளுநர் பதவியேற்று இலங்கைக்கு வந்தார். இவர் சிங்கள அகராதியை எழுத அதிக தொகைப்பணத்தைச் செலவிட்டார். பல்கலைக்கழகக் கல்லூரியைப் பல்கலைக்கழகமாக மாற்றவும் அக்கறை செலுத்தினார். கிராம நிர்வாகத்துக்காக கிராம சபையை உருவாக்கியதோடு, சம்பளம் பெறாமல் தொழில்புரிந்த கிராமத் தலைவர்களுக்கென அரசு மூலம் சம்பளம் வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்தார்.

## ஹர்பட் ஸ்டேன்லி (1927-1931)



'டொனமூர் கமிஷனை' இவரே அறிமுகப்படுத் தினார். அத்தோடு, சட்ட நிர்ணய சபையில் மோட்டார் வாகனச் சட்டமூலத்தையும் நிறைவேற்றினார். கொழும்பு ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி மூலம் ஆயுர்வேத வைத்தியசாலையை அமைத்தார். இவரது நிர்வாகக் காலத்தில்தான் மகாத்மா காந்தி இலங்கைக்கு விஜயம் செய்தார்.

## கிரீம் தொம்சன் (1931-1933)



1919 ஆம் ஆண்டு இவர் இலங்கையின் குடியேற்றச் செயலாளராக செயலாற்றினார். இவர் நாட்டு மக்களின் உள்ளங்களை அதிகம் கவர்ந்தவராகவும் இருந்தார். 1924 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்ட நிர்ணய சபை இவராலேயே கலைக்கப்பட்டது. டொனமூர் கமிஷனின் சிபாரிசுப்படி மக்கள் வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவரே காங்கேசன்துறை காசநோய் வைத்தியசாலையையும் கட்டுவித்தார்.

## ரெஜினோல்ட் எட்வர்ட் ஸ்டப்ஸ் (1933-1937)



இவரது நிர்வாகக் காலத்தில் சொற்ப காரியங்களே நிகழ்ந்தன. இவரது நிர்வாகக் காலத்தில்தான். பொலிஸ் அதிகாரிகளின் சம்பளம் அதிகரிக்கப்பட்டதோடு, டொனமூர் யாப்பின் இரண்டாம் அரச நிர்ணய சபையையும் கூட்டப்பட்டது.

## என்ட்ரு கெல்ட்கொட் (1937-1944)



இவரது நிர்வாகக் காலத்தில் உலகிலும் உள்நாட்டிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. 1939 ஆம் ஆண்டு 2 ஆம் உலக யுத்தம் ஆரம்பமான தோடு, இலங்கையும் அதில் சம்பந்தப்பட வேண்டியேற்பட்டது. 1940 ஆம் ஆண்டு ஏராளமான சமசமாஜத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ருவன்வெலிசாயவையும் கலாவெவவையும் புனரமைத்தார்.

ஏ.ஜே.எம். நிழாம்

---



அங்.இல: 3885

த.ஆராதிகன்,
பாலர் வகுப்பு,
சிறுவர் பூங்கா முன்பள்ளி
திருநெல்வேலி.



அங்.இல: 3886

ப.யதுர்ஷன்,
தரம் $3^{D}$,
புனித அந்தோனியார்
கல்., கண்டி.



அங்.இல: 3887

செ.தேவஜோதி,
தரம் - $4^{B}$,
ஆர்.கே.எம்.வித்.,
அக்கறைப்பற்று.



அங்.இல: 3888

என்.நவீத்,
தரம் - $4^{A}$,
திப்பிடிய மு.ம.வித்.,
திப்பிடிய.



அங்.இல: 3889

அம்ரின் நஜா,
தரம் - $5^{B}$,
பாபுல் ஹஸன் ம.ம.வித்.,
கேகாலை.



அங்.இல: 3890

சிபா பானு,
தரம் - 5,
கல்லஞ்சியாகம அரபா
மு.வித்., அநுராதபுரம்.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3891

எஸ்.அக்தார்,
தரம் - $6^{C}$,
அல்-ஹம்றா ம.வித்.,
திருகோணமலை.



அங்.இல: 3892

டீ.கிஷோக்,
தரம் - $7^{F}$,
இந்துக் கல்.,
கொழும்பு-4.



அங்.இல: 3893

பே.ஹர்சனா,
தரம் - $8^{B}$,
சென்.மேரிஸ் கல்.,
திருகோணமலை



அங்.இல: 3894

இஃபாஸ் மரிக்கார்,
உயர் தரம்,
மின்ஹாத் தே.பாட.,
மாத்தறை.



அங்.இல: 3895

எம்.சியாம்,
உயர் தரம்,
நூரிய்யா அரபுக் கல்.,
திருகோணமலை.



அங்.இல: 3896

த.மனோகரன்,
தரம் - $11^{A}$,
விபுலானந்தா த.ம.வித்.,
மொனராகலை.

---

# நவீன முறையில் தாடை அறுவை சிகிச்சை

## பாலாஜி மருத்துவமனையில் பின்லாந்து விஞ்ஞானி விளக்கம்



ஈராக் இராணுவ வீரருக்கு அந்நாட்டில் நடைபெற்ற கலவரத் தின்போது, பின்மண்டையில் குண்டு பாய்ந்து கண் மற்றும் மேல் தாடை வழியாக வெளியேறியதில் பலத்த காயம் ஏற்பட்டது. பாலாஜி பல் மற்றும் முகச்சீரமைப்பு மருத் துவமனையில் அவருக்கு சிக்க லான அந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக நடத்தி சிதைந்த முகத்தை பழைய நிலைக்கு மாற்றி சாதனை படைத்தார் டொக்டர் எஸ்.எம்.பாலாஜி

நவீன முறையில் வயிற்றுப் பகுதியில் உள்ள தேவையற்ற கொழுப்பை எடுத்து அதனைக் கொண்டு தாடை அறுவை சிகிச் சையை செய்யலாம். இவ்வகை உயரிய தொழில்நுட்பம் மூலம் பலதரப்பட்ட முகக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இது பற்றிய விளக்கத்தை பின்லாந்து மருத்துவர் டொக்டர் ஜோர்ஜ் சாண்டர் சென்னை பாலாஜி மருத் துவமனையில் வெளியிட்டார்.

பாலாஜி பல் மற்றும் முகச்சீர மைப்பு மருத்துவமனையின் 15 ஆம் ஆண்டு விழா மற்றும் கோன்பீம் முப்பரிமாண சி.டி ஸ்கேன் (Cone Bae 3D CT Scan) துவக்க விழா சென்னையில் நடைபெற்றது. பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஸ்டெம்செல் விஞ்ஞானி பேராசிரியர் டொக்டர் ஜோர்ஜ் சாண்டர் சிறப்பு விருந்தி னராகக் கலந்து கொண்டார்.

### அதிநவீன 'ஸ்டெம்செல்'



ஸ்டெம்செல் என்பது பல்வகைப் பட்ட திசுக்களை உருவாக்கக்கூடிய நுட்பமான திசுவா கும். இவ்வகைத் திசுக்கள் உடலில் குறிப்பிட்ட பாகங் களில் மிகச்சிறிய அளவிலேயே காணப்படும். டொக்டர் ஜோர்ஜ் சாண்டர் இவ்வகை அரிய திசுக்களை கொழுப்பில் இருந்து கண்டறிந்து அவற்றைப் பிரித்து பண்படுத்தித் தாடைப்பகுதிகளை உருவாக்கி யுள்ளார்.

விழாவில் டொக்டர் ஜோர்ஜ் சாண்டர் கலந்துகொண்டு 15 ஆண்டுகள் பல் மற்றும் முகச்சீர மைப்பு துறையில் டொக்டர் பாலாஜி பல் மற்றும் முகச்சீர மைப்பு மருத்துவமனையானது செய்த அரும்பெரும் சாதனைகள் பற்றியும் விளக்கி உரையாற்றினார்.

திரிபுரா மாநில ஆளுநர் டி.ஒய். பட்டேல் தலைமை விருந்தினரா கக் கலந்துகொண்டு இங்கு உரை யாற்றினார். மற்றும் கோன்பீம் சி.டி ஸ்கேன் மருத்துவ உபகரணத் தையும் ஆரம்பித்து வைத்தார். கோன்பீம் சி.டி ஸ்கேன் மருத்துவ உபகரணச் சாதனம் தலை மற்றும் கழுத் துப் பகுதியை மட்டும் 'ஸ்கேன்' செய்யும் இது உயரிய நுண்கதிர் தொழில்நுட்பத் தைக் கொண்ட தாகும். இதன்மூலம் குறைவான கதிரியக்க தாக்கம் மட்டுமே ஏற்படும். பிறப்பில் முகப்பகுதியில் ஏற்படும் குறை பாடுகளை எளிதில் துல்லியமாகக் கண்டறிய இந்த உபகரணம் பயன்படும். சாதாரண சி.டி ஸ்கேன் ஏறக்குறைய 100 முதல் 600 வரையான எக்ஸ்ரே கதிர்வீச்சை ஏற்படுத்தும். ஆனால், இந்தப் புதிய தொழில்நுட்பத்தால் வெறும் 3 எக்ஸ்ரே கதிர்வீச்சுக்கு சமமான பாதிப்பே ஏற்படும். இதனால், குழந்தைகளுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு இருக்காது என்று டொக்டர் எஸ்.எம்.பாலாஜி கூறினார்.

-ராஜா



தென் இந்தியாவின் முதலாவதும் இந்தியாவின் இரண்டாவதுமான கோன்பீம் சி.டி ஸ்கேன் மருத்துவ உபகரணத்தை ஆளுநர் டி. வை. பட்டேல் பாலாஜி மருத்துவமனையில் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் டொக்டர் பாலாஜி. டொக்டர் ஜோர்ஜ் சாண்டர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூநகரி-முழங்காவிலைச் சேர்ந்த சசிக்குமார்-கீதாஞ்சலி தம்பதியரின் செல்வப் புதல்வன் மேனுஜன், 08.12.2010 இல் (இன்று) தனது முதலாவது பிறந்ததினத்தை விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



கல்லாறைச் சேர்ந்த அல்பிரட்கரன்-ஆன்சுஜானா தம்பதியரின் செல்வப் புதல்வன் அடம் ஜாபர் பெனியேல், 10.11.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் யேசுகிறிஸ்துவின் நாமத்தால் சகல ஆசிகளும் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.




நாவலப்பிட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன்-சுந்தரி தம்பதியரின் செல்வப் புதல்வி ஆர்.கயல்விழி, 30.11.2010 அன்று தனது நான்காவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறையருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: பீ.விஜிதா)*





கலேவெல-அலுத்கமயைச் சேர்ந்த பாரிஸ்-ஹில்மியா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அஸ்ஹா, 04.12.2010 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



கல்முனை தனியார் கல்வி நிறுவனமான ஹனிபா கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கல்லூரி அதிபர் எம்.நௌஷாத் உரையாற்றுவதையும் நிகழ்விற்கு வருகை தந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களையும் படத்தில் காணலாம்.

(தகவல்: நிப்றாஸ் மன்சூர், கல்முனை)







எஃப்.நிஸ்ரினா, தரம் - 9G, அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொடை.



சிப்ராஸ் மொஹம்மட், தரம் - 6D, அல்-அக்ஷா தே.பாட., கல்பிட்டி.



எஃப்.நஸீஹா, தரம் - 10B, அஸ்ஹர் கல்., அக்குறனை.



ஆர்.ராகுல்சர்மா, தரம் - 6, சிவனேஸ்வரா த.ம.வித்., உன்னஸ்கிரிய.



வி.சரஸ்வதி, தரம் - 4, ஹுலுகங்கை மு.வித்., மடுல்கலை.



ஐ.றிஹானா, தரம் - 1, மதீனா வித்., வவுனியா.



எஃப்.ரமீஸா, தரம் - 5A, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.



மு.நிலோஜன், தரம் - 10, இ.எ.பி மாதம்பை இல.2 பாட., இறக்குவானை.



எஸ்.சிந்துஜா, தரம் - 9, வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம்.




கே.டிலுக்ஷா, தரம் - 3, விக்னேஸ்வரா த.ம.வித்., பன்விலை.




இன்றைய பாடத்தில் குழந்தைகளின் உருவங்களை வரையப் பழகுவோம்.

குழந்தைகளின் உடலமைப்பு பூரணமானது. அழகானது. குழந்தைகளின் உருவங்களை வரைவது மனதிற்கு இனிமையான உணர்வுகளைத் தரும்.

ரேகைகளால் வரைந்து காட்டப்பட்டுள்ள பல்வேறு தோற்றங்களிலான குழந்தைகளின் உருவ அமைப்புகள் இங்கு காட்டப்பட்டுள்ளன. நீங்களும் இதன்படி வரைந்து பயிற்சி பெறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## புதிய தொடர்கதை ஆரம்பம்

# சங்கிலிக்கறுப்பன் எங்கே சென்றான்?

அரியாலையூர் சி.சிவதாசன்

**வீட்டின் பின்புறமாக, நள்ளிரவில் ஒரு கறுத்த உருவம் நுழைந்தது. எல்லோரும் நித்திரை செய்யும் அந்நேரத்தில் அமைதியான சூழலில் அந்த உருவம் மெல்ல மெல்ல மாணிக்கம் பிள்ளையின் வீட்டை நோக்கி முன்னேறியது**



பவளத்தீவினுள் வடக்கு நோக்கிப் பத்து மைல் தூரம் உள்நோக்கிச் செல்வோமானால் பசுமை நிறைந்த வயல்வெளிகள் கண்ணுக்கு குளிர்மை தரும் அழகான காட்சியை நாம் காணலாம். அந்த வயல் வெளிக்கூடாகச் செல்லும் மண்பாதையில் மேலும் ஒரு மைல் தூரம் சென்றால் பச்சைப் பசேலெனப் பாரிய வேப்ப மரங்களைக் காணலாம். அந்த வேப்பக்கூடலுக்கு மத்தியில் கண் முழிகள் பிதுங்க நாக்கை வெளியே நீட்டியவண்ணம் கையிலே சூலாயுதம் ஏந்தி நிற்கும் காளியம்மனின் சிலை அமைதியான அந்தச் சூழ்நிலையில் பார்ப்போர் உள்ளத்தை அச்சமடையச் செய்யும். இந்தக் காளியம்மன் சிலைக்குப் பின்புறமாகச் சிறிய கேணியொன்று உண்டு.

வேம்புகளும் கேணியும் அருகருகே இருப்பதனால் இச்சுற்றாடலை மையமாகக்கொண்டு இருக்கும் அச்சிறிய கிராமத்தை வேப்பங்கேணி என மக்கள் அழைக்கலாயினர். அதுவே அக்கிராமத்தின் நிரந்தரமான பெயருமாயிற்று. அக்கிராமத்து மக்கள் விவசாயம் செய்வதிலும் தோட்ட வேலைகள் செய்வதிலும் காலத்தைப் போக்கி வந்தார்கள். பெரும்பாலானவர்களுக்கு நெல் வயல்களும் தோட்டக்காணிகளும் சொந்தமாக இருந்தன. இருந்தாலும் சொந்த நிலங்களற்ற கூலிவேலை செய்து பிழைக்கும் சிலரும் அங்கு இருக்கத்தான் செய்தார்கள். இவ்வாறு அமைதியாக இருந்த வேப்பங்கேணிக் கிராமத்து மக்களின் தோட்டங்களில் வீடுகளில் மர்மமான முறையில் களவுகள் நாளாந்தம் இடம்பெற்று வரலாயிற்று.

வசதி மிகப் படைத்தவர்களிடம் இக்களவுகள் தொடராக இடம்பெற்று வந்தன. இக்களவுகளைச் செய்வது யார்? என்பது யாருக்கும் தெரியாது. கிராமத்தவர்கள் அனைவரும் கூடி இக்களவுகளைச் செய்து வருபவர்களைக் கண்டறிய பல வழிகளிலும் முயற்சி செய்து வந்தார்கள். எனினும், முடியவில்லை. கள்வனைப் பிடிக்கும் முயற்சியை அக்கிராம மக்கள் தொடரும்போதெல்லாம் களவுகள் எதுவும் நடப்பதில்லை. அப்படியாயின், அக்கள்வன் இந்தக் கிராமத்தில் வாழும் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும்? என்ற எண்ணம் அக்கிராமத்தில் வாழும் மக்களிடையே எழலாயிற்று. ஒரு சிலர் மீது அவர்கள் கண்ணோட்டம் செலுத்தியபோதும் அதனை வெளிப்படையாக நிரூபிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். அயல் கிராமத்திலிருந்தும் யாராவது கள்வர் வந்திருக்கலாம் எனவும் அவர்கள் கருதினார்கள். களவுகளும் தீவிரமடைந்தன. விவசாயப் பொருட்கள் வீட்டுப் பொருட்கள் என்பன ஆரம்பத்தில் திருடப்பட்டபோதும், பின்னர் ஆடு, மாடுகளும் களவாடப்பட்டன.

இக்களவுகளினால் வேப்பங் கேணிக் கிராம மக்கள் மிகவும் வேதனையோடு வாழ்ந்து வரும்போது ஒருநாள் அந்தக் கிராமத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது? அந்த வேப்பங்கேணிக் கிராமத்தின் மிகப்பெரும் பணக்காரரான மாணிக்கம்பிள்ளை யின் வீட்டின் பின்புறமாக, நள்ளிரவில் ஒரு கறுத்த உருவம் நுழைந்தது. எல்லோரும் நித்திரை செய்யும் அந்நேரத்தில் அமைதியான சூழலில் அந்த உருவம் மெல்ல மெல்ல மாணிக்கம் பிள்ளையின் வீட்டை நோக்கி முன்னேறியது. அங்கும் இங்கும் தன் பார்வை யைச் செலுத்தி யாரும் தன்னை அவதானிக்கிறார்களா? என்ற முன்னெச்சரிக்கையோடு செல்லும் அந்த உருவத்தைப் பின்பற்றி கையில் பெரிய தடியுடன் ஒருவன் சென்றுகொண்டிருந்தான்.

உருவத்தின் கண்களில் படாமல் மிக அவதானமாகச் சென்ற அவன் உருவத்தை மிக அண்மித்தவுடன் தான் வைத்திருந்த தடியால் அதன் தலையில் ஓங்கியடித்தான்.

இதனை எதிர்பாராத அந்த உருவம் அடியின் வேதனையால் 'ஐயோ! அம்மா!'' என பெரும் சத்தத்துடன் அலறி அப்படியே நிலத்தில் வீழ்ந்தது. சத்தம் கேட்டு அயலவர்கள் விழிப்படைந்தார்கள். சத்தம் மாணிக்கம்பிள்ளையின் வீட்டுப்பக்கம் கேட்கிறது என்பதை ஊகித்தார்கள். அவரின் வீடு நோக்கி ஓடி வந்தார்கள். மாணிக்கம்பிள்ளையும் அவ்விடத் திற்கு ஓடிவந்தார். மயக்கமுற்ற நிலையில் கிடந்த அந்த உருவத் துக்குரியவனின் முகம் கறுப்புத் துணியால் மறைக்கப்பட் டிருந்தது. அதனை உருவத்தின் தலையில் அடித்தவனாகிய மாணிக்கம்பிள்ளையின் வேலைக்காரன் அகற்றினான். "ஆ! சங்கிலிக் கறுப்பனா? இவனை அடித்துக் கொல்லுங்கள்'' என்று அங்கு நின்றவர்களில் ஒருவன் கூறினான். சிலர் அவன் மீது தாக்குதலை மேற்கொண் டனர். மாணிக்கம்பிள்ளை அவர்களைத் தடுத்து நிறுத்தி, "இவனைக் கொண்டுபோய் வேப்பங்கேணிக்கு அண்மையில் போட்டுவிட்டு வாருங்கள். மற்றவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும்'' என்றார்.

அவரின் கூற்றுப்படி சங்கிலிக் கறுப்பன் வேப்பங்கேணிக்கு அருகில் போடப்பட்டான். மயக்கமுற்ற அவனுக்கு உதவ எவரும் முன்வரவில்லை. அவரவர் தம் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அன்று இரவு அமைதியானது. மறுநாள் விடிந்ததும் சிலர் வேப்பங்கேணிக்கு அண்மையில் சங்கிலிக் கறுப்பனைப் பார்க்க வந்தார்கள். அங்கு அவன் இல்லை. ஆனால், எங்கும் இரத்தம் சிந்திக் கிடந்தது. அப்படியென்றால் சங்கிலிக் கறுப்பன் எங்கே? இந்தச் செய்தி கிராமம் எங்கும் பரவியது. சங்கிலிக் கறுப்பனை அவன் வீட்டிலும் சென்று பார்த்தார்கள். அங்கும் அவன் இருக்கவில்லை.... எங்கும் பரபரப்புச் சங்கிலிக் கறுப்பன் மனைவி செய்தியறிந்து துடித்துப் போனாள். இது எப்படி நடந்தது? சங்கிலிக் கறுப்பன் எங்கே சென்றான்? என்பதே கிராமம் முழுவதும் ஒரே பேச்சாக இருந்தது.

(தொடரும்)

## கெடுதல் செய்தால்....

தவளை, எலி இரண்டும் நட்புடன் பழகி வந்தன. எலியின் வளைக்கு அடிக்கடி தவளை வரும். எலி, தன்னிடமுள்ள உணவுப் பண்டங்களை தவளைக்குக் கொடுக்கும். தன்னுடைய வீட்டிற்கு வரும்படி எலியைப் பலமுறை அழைத்தது தவளை. ஆனால், தவளையின் வீடு ஆற்றின் மறுகரையில் இருந்ததால், எலியால் அங்கு செல்லமுடிய வில்லை.

ஒருநாள், தவளை எலியை தன்னுடைய முதுகில் சுமந்து ஆற்றின் ஊடாக அழைத்துச் செல்வதாக கூறியது. எலியும் அந்த யோசனைக்கு சம்மதித்தது. அதன்படி, நூல் ஒன்றை எடுத்து அதன் ஒரு முனையை தவளையின் காலிலும் மற்றொரு முனையை எலியின் காலிலும் கட்டிக் கொண்டு தவளையின் வீட்டுக்குப் புறப்பட்டது எலி.



ஆற்றின் நடுவில் போய்க்கொண்டிருக்கும்போது, தவளைக்கு அற்பமான யோசனை ஒன்று வந்தது. அதாவது, எலியைக் கொன்றுவிட்டால் அது சேமித்து வைத்திருக்கும் உணவுப் பண்டங்கள் அனைத்தையும் தின்றுவிடலாம் என்பதுதான் அது. உடனே, தவளை நீருக்குள் மெல்ல மூழ்கியது. உயிர்ப்பயத்தில் அங்குமிங்கும் குதித்தது எலி. அப்போது, வானத்தில் பறந்து கொண்டிருந்த பருந்து ஒன்று எலியைப் பார்த்து விட்டது. கீழே இறங்கிய அந்தப் பருந்து, ஒரே கவ்வலில் எலியைத் தூக்கிக்கொண்டு பறந்தது. ஒரே நூலில் காலைக்கட்டி இருந்ததால், எலியோடு சேர்ந்து தவளையும் பருந்துக்கு இரையானது.

மற்றவர்களுக்குத் துன்பம் செய்ய நினைத்தால், தனக்கும் அந்த துன்பம் வந்து சேரும். எனவே, ஒருபோதும் மற்றவர்களுக்கு கெடுதல் செய்யக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் வசந்திக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

මාලා: වසන්ති, කොහොමද?
வசந்தி, கொஹொமத?
மாலா: வசந்தி, எப்படி?

වසන්ති: හොඳයි, මේ දවස්වල ඔයාව දකින්නත් නැහැ.
ඔයා දැන් කොහෙද ඉන්නේ?
ஹொந்தய், மே தவஸ்வள ஒயாவ தகின்னத் நெஹெ.
ஒயா தென் கொஹெத இன்னே?
வசந்தி: நல்லது. உங்களை நீண்ட நாட்களாக காணவில்லை.
நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள்?

මාලා: කොළඹ ඉන්නේ වසන්ති.
கொழம்ப இன்னே வசந்தி.
மாலா: கொழும்பில் இருக்கின்றேன் வசந்தி.

වසන්ති: ඔයා එහෙ කොහෙද නතරවෙලා ඉන්නේ?
ஒயா எஹெ கொஹெத நதறவெளா இன்னே?
வசந்தி: நீங்கள் அங்கு எங்கே தங்கியிருக்கிறீர்கள்?

මාලා: මම අපේ නැන්දලගේ ගෙදර නතරවෙලා ඉන්නේ.
மம அபே நெந்தலகே கெதற நதறவெலா இன்னே.
மாலா: நான் எங்கள் மாமி வீட்டில் தங்கியிருக்கிறேன்.

වසන්ති: ඔයා දැන් කොහේද යන්නේ මාලා ?
ஒயா தென் கொஹேத யன்னே மாலா?
வசந்தி: இப்போது நீங்கள் எங்கே போகிறீர்கள் மாலா?

මාලා: මම ගෙදර යනවා.
மம கெதற யனவா.
மாலா: நான் வீட்டிற்குப் போகிறேன்.

වසන්ති: එහෙනම් අපේ ගෙදර ගිහින් දවල්ට කෑම කාලා යමු.
எஹெனம் அபே கெதற கிஹின் தவல்ட கேம காலா யமு.
வசந்தி: அப்படியாயின் எங்கள் வீட்டிற்குப் போய் பகலுணவை சாப்பிட்டுவிட்டுப் போவோம்.

මාලා: අනේ බොහෝම ස්තුතියි. දැන් බැහැ වසන්ති.
අම්මත් බලාගෙන ඇති.
அனே பொஹொம ஸ்தூதிய். தென் பெஹெ வசந்தி.
அம்மத் பலாகென எதி.
மாலா: மிக்க நன்றி வசந்தி. இப்போது முடியாது. அம்மாவும் பார்த்துக்கொண்டு இருப்பார்.

වසන්ති: හොඳයි, එහෙනම් මම යනවා මාලා.
ஹொந்தய், எஹெனம் மம யனவா மாலா.
வசந்தி: நல்லது, அப்போ நான் போகின்றேன் மாலா.

මාලා: හොඳයි වසන්ති.
ஹொந்தய் வசந்தி.
மாலா: நல்லது வசந்தி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

**உதாரணம்:** நான் கொழும்பில் இருக்கிறேன்.
**මම කොළඹ ඉන්නේ.**

i. எங்கள் மாமி வீட்டில் தங்கியிருக்கிறேன்.
..............................................................
ii. வீட்டிற்குப் போய் பகலுணவை சாப்பிட்டுவிட்டுப் போவோம்.
..............................................................
iii. அம்மாவும் பார்த்துக்கொண்டு இருப்பார்.
..............................................................






**Have been** எனும் கூட்டு வினைச்சொல்லை (Compound Verb) அல்லது **Has been** எனும் கூட்டு வினைச்சொல்லை, இறந்தகால எச்சவினைச் சொல்லுடன் (Past Participle) தனித்தனித் தொகுதியாகக் கையாண்டு அமைக்கப் படும் வாக்கியங்கள், செயற்பாட்டு வினை (Passive Voice) என்ற வகையைச் சேர்ந்த வாக்கியங்களாக அமைகின்றன என்பதை நாம் அறிவோம்.

✱ அவ்வாறு அமைகின்ற செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்கள், நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களில் (Present Perfect Tense) காணப் படுகின்ற, செய்வினை வாக்கியங்களுக்குரிய (Active Voice) செயற்பாட்டு வினை (Passive Voice) வாக்கியங்கள் ஆகும் என்பதை நாம் மீண்டும் ஞாபகத்தில் இருத்திக்கொண்டு, மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(அ) You have given that book.
நீ அந்தப் புத்தகத்தைக் கொடுத்து விட்டாய்.
[நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்]
(Active Voice of the Present Perfect Tense)

(ஆ) That book has been given by you.
அந்தப் புத்தகம் உன்னால் கொடுக்கப்பட்டுள்ளது.
[நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்]
(Passive Voice of the Present Perfect Tense)

(இ) He has thrown that parcel.
அவன் அந்தப் பொதியை எறிந்துவிட்டான்.
[நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்]
(Active Voice of the Present Perfect Tense)

(ஈ) That parcel has been thrown by him.
அந்தப் பொதி அவனால் எறியப்பட்டு விட்டது.
[நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்]
(Passive Voice of the Present Perfect Tense)

(உ) She has posted that letter.
அவள் அந்தக் கடிதத்தை தபால் செய்துவிட்டாள்.
(நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்)
(Active Voice of the Present Perfect Tense)

(ஊ) That letter has been posted by her.
அந்தக் கடிதம் அவளால் தபால் செய்யப்பட்டு விட்டது.
(நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்)
(Passive Voice of the Present Perfect Tense)

(எ) Rohan has done that work.
றொஹான் அந்த வேலையைச் செய்துவிட்டான்.
(நிகழ்கால வினைமுற்று (செய்வினை) வாக்கியம்).
(Active Voice of the Present Perfect Tense)

(ஏ) That work has been done by Rohan.
அந்த வேலை றொஹானால் செய்யப்பட்டு விட்டது.
(நிகழ்கால வினைமுற்று (செயற்பாட்டு வினை) வாக்கியம்).
(Passive Voice of the Present Perfect Tense)

**குறிப்பு:** Has done ஆகிய வினைச்சொற்கள் இரண்டும் ஒரு கூட்டு வினைச் சொல்லாகக் கருதப்பட வேண்டும். அவ்வாறே Has been done ஆகிய மூன்று வினைச்சொற்களும் ஒரு கூட்டு வினைச்சொல்லாகவே (Compound Verb) கருதப்பட வேண்டும் என்பது ஆங்கில இலக்கண மரபு முறை ஆகும்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியா - அமெரிக்கா கூட்டுப் பயிற்சிக்கு எதிர்ப்பு



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...



தென்கொரியாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்து தென் கொரியா கடற்பரப்பில் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறித்து வட கொரியா தனது அதிருப் தியை வெளியிட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் தென்கொரியாவின் 'யொங்பியொங்' என்ற தீவுப் பகுதியை நோக்கி வட கொரியா ஷெல் தாக்குதல் களை மேற்கொண்டிருந்தது. இதன் காரணமாக, இராணு வத்தின் இரண்டு பேர் உட்பட நால்வர் கொல்லப் பட்டதுடன் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்க ளும் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இத்தாக்கு தல் சம்பவம் நடந்து ஐந்து தினங் களின் பின்னரே, தென்கொரியா வும் அமெரிக்காவும் கடற்பரப்பில் குறித்த பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுடன் தொடர்ந்தும் இத்தகைய பயிற்சிகளில் ஈடுபட் டால் மீண்டும் தென்கொரியா மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் வடகொரியா எச்சரிக்கை செய்துள் ளதை அடுத்து தென்கொரியாப் படையினரும் தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள 28,000 அமெரிக்க படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட் டுள்ளனர்.

மேலும், இக்கடற்பரப்பில் அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ். வொஷிங்டன் என்ற போர் கப்பல் நங்கூரமிடப்பட்டிருப்ப தையிட்டு சீனாவும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. சீனா மீதான தாக்குதல் தூரத்தில் இந்தக் கப்பல் நிறுத்தப்பட்டிருப் பதே சீனாவின் அதிருப்திக்குக் காரணமாகும்.

# ஹெய்ட்டியில் மருத்துவர்கள் தட்டுப்பாடு



ஹெய்ட்டியில் பரவியுள்ள வாந்திபேதி நோயின் காரணமாக, 1,500 இற்கும் மேற்பட்டோர் மரணமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், ஆயிரக்கணக்கிலானோர் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதனால் அவர் களுக்குரிய சிகிச்சைகளை வழங்குவ தற்கு போதிய மருத்துவர்களும் தாதியர் களும் இல்லாமல் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அந்நாட்டின் மருத்து வத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபை ஏனைய நாடுகளிடம் இது தொடர் பான உதவிகளைக் கோரியுள்ளது. அதற் கமைய, கியூபாவிலிருந்து 400 மருத்துவர்கள் ஹெய்ட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன், அன்றாட அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமல் பலர் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

# தெரிந்து கொள்வோம்



★ உலகப்படத்தை முதலில் வரைந்து காட்டியவர் யார்?

**தொலமி**

★ இலங்கையில் குடித்தொகை கணிப்பு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறு கின்றது. இது எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த குடித்தொகை கணிப்பு எப்போது நடைபெறவுள்ளது?



**ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு -1871**
**அடுத்த குடித்தொகைக் கணிப்பு - 2011**

★ இலங்கையின் சிகிரியா ஓவிங்களை ஒத்த ஓவியங்கள் உலகில் வேறு எங்காவது உள்ளதா?



**இந்தியாவில் உள்ள அஜந்தா குகை ஓவியங்கள் சிகிரியா சித்திரங்களை ஒத்தவை**

★ நொபெல் பரிசு எவரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது? நொபெல் பரிசு தினம் எப்போது?



**அல்பர்ட் நொபெல் என்பவரின் பெயரால் நோர்வேயிலிருந்து வழங்கப்படுகின்றது**
**நொபொல் பரிசு தினம் டிசம்பர் - 10**



★ சக்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது?

**கியூபா**

★ ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சிக்குத் தலைமை தாங்கி நடாத்தியவர் யார்?

**விளாடிமீர் இலிச் லெனின்**

★ விகிதாசார தேர்தல் முறை இலங்கையைத் தவிர நடை முறைப்படுத்தப்படும் இரண்டு நாடுகள் தருக?




**1. இஸ்ரேல் 2. இத்தாலி**



★ இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

**ஆனந்த சமரக்கோன்**

★ ஐக்கிய நாடுகள் சபை யின் பாதுகாப் புச் சபையில் அங்கத்துவம் பெறும் நாடுகள் எத்தனை? அதில் 'வீட்டோ' அதிகாரம் உள்ள நாடுகள் எவை?



**15 நாடுகள்.**
**ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா**


★ ரிச்டர் அளவுத்திட்டம் என்றால் என்ன?

**புவி அதிர்வை அளக்கும் அளவுத் திட்டமாகும்**

★ லேசர் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?

**T.H.வெனிமோஸ்**

★ நியூமோனிய நோய் உடலின் எந்த உறுப்பைப் பாதிக்கின்றது?



**நுரையீரல்**




★ 16 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எங்கே நடைபெற்றது?

**சீனாவின் குவான்சு நகரில்**

★ மூங்கில் மரம் ஒரு செடியாகும். அது பூத்தால் எதைக் குறிக்கின்றது?



**மரம் முற்றிவிட்டதைக் குறிக்கும்**

★ உலக நாடாளுமன்றங்களின் தாய் எனப்படும் மக்கள் பிரதிநிதிகள் சபை எது?

**ஐக்கிய ராச்சியத்தின் 'கொமன்ஸ் சபை'**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

# அணுத்தொழில்நுட்பத்தில் மருந்து தயாரிப்பு



அணுத்தொழில் நுட்பத்தை உபயோ கித்து நோய்களுக் குரிய மருந்து வகை களைத் தயாரிப்ப தற்கு தென்னாபிரிக்கா தீர்மானித்திருப்பதாக செய்திகள் தெரிவிக் கின்றன. குறிப்பாகப் புற்றுநோய், இருதயக் கோளாறுகள் ஆகிய நோய்களுக்கான மருந்து வகைகளை அணு எரிபொருளை பயன்படுத்தித் தயாரிக்க முடியும் என்று தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்ததைய டுத்தே அதுகுறித்துப் பரிசீலித்த அந்நாட்டு அரசாங்கம் அதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

## அற்லஸ் கேள்வி - 285

**கேள்வி:** வடகொரியாவின் ஷெல் வீச்சிற்கு உள்ளாகிய தென்கொரிய தீவின் பெயர் என்ன?

**சரியான விடை........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 285,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 283 இன் சரியான விடை: 15 வருடங்கள்**

**பரிசு பெறுவோர்**

ஆர்.சச்சிந்திரன்,
58/11, சென்ஜோசப் வீதி,
கிரேன்ட்பாஸ், கொழும்பு-14.

எஸ்.வினோதினி,
96, ஹல்வதுறை, ரொக்கெட் தோட்டம்,
புளத்சிங்கள.

கா.அபிஷேக் கோபால்,
DP, 2 ஆம் நவகம்புர, கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நிறைவு

சீனாவின் குவாங்ஸூ நகரில் நடைபெற்ற 16 ஆவது ஆசிய விளையாட்டு விழா நிறைவு பெற்றுள்ளது. இப்போட்டிகளில் சீனா மொத்தமாக 416 பதக்கங்களுடன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதில் 199 தங்கப் பதக்கங்கள் உள்ளடங்குகின்றன.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடக்கின்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள்





இம்முறை சீனாவில் தொடர்ச்சியாக 16 நாட்கள் நடைபெற்றன. 45 நாடுகளைச் சேர்ந்த 9,700 போட்டியாளர்கள் கலந்து கொண்ட மேற்படி போட்டியில் சீனா தொடர்ந்து எட்டாவது தடவையாக முதலாவது இடத்தை தக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி, ஆசிய விளையாட்டு விழாவின் நிறைவு தினத்தில் கண்கவர் நிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன. அதில் வாண வேடிக்கைகள் நடன நிகழ்ச்சிகள் என்பன ரசிகர்களைப் பரவசப்படுத்தின.

## ஐ.பி.எல் போட்டிகளுக்கு ஏலம் விலை நிர்ணயம்

அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள நான்காவது ஐ.பி.எல் போட்டிகளுக்கான வீரர்களை ஏலத்தில் பெறுவதற்கான விலை நிர்ணயம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பிரிவுகள் பிரிக்கப்பட்டு வீரர்களின் தரத்திற்கு ஏற்ப அவர்கள் ஒவ்வொரு பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, உரிய தராதரங்களுக்கு ஏற்பவே ஏலத்திற்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, சச்சின் டெண்டுல்கர், டோனி,ஷெவாக், ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங் ஆகியோர் ஒரே ஏலப் பிரிவில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு இந்திய நாணயப் பெறுமதியில் ஒருவருக்கு 1.84 கோடி ரூபா விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பிரிவில் யூசுப் பதான், ரெய்னா, சகிர்கான் ஆகியோருக்கு 1.3 கோடி ரூபாவும், மூன்றாம் பிரிவில் தம்பிர், விராத் கொஹ்லி உத்தப்பா, இர்பான் பதான், நெஹ்ரா, பிரவின் குமார், இஷாந்த் ஷர்மா, கங்குலி, டிராவிட், கும்ப்ளே, லக்ஸ்மன் ஆகியோருக்கு 92 லட்சம் ரூபாவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஐ.பி.எல் போட்டிகளில் சோபிக்காத போட்டியாளர்களே மூன்றாவது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், நான்காம், ஐந்தாம் பிரிவுகளில் அதிக பிரபல்யம் இல்லாத இன்னும் சில வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

## சுசந்திகா மீண்டும் வர ஆயத்தமாகின்றார்




இலங்கையின் ஓய்வு பெற்ற ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்ஹ மீண்டும் இலங்கை சார்பாக போட்டிக்களத்திற்கு வருவதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக வெள்ளிப் பதக்கமொன்றை வெற்றியீட்டியவரான சுசந்திகா, அண்மைக்காலமாக சர்வதேச தரத்திலான மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கை பின்னடைவு நிலையை அடைந்துள்ளதைக் கவனத்தில் கொண்டே மீண்டும் போட்டிக்களம் புகுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதியுடனும் புதிதாக நியமனம் பெற்ற விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத் கமகேயுடனும் கலந்து பேசியதன் பின்னர் இறுதித் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் சுசந்திகா மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்கூட்டியே செல்கிறார் கெரி கேர்ஸ்டன்

இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் தொடர் தென் ஆபிரிக்காவில் டிசம்பர் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

போட்டிகள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே இந்திய வீரர்கள் சிலர் பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக தென் ஆபிரிக்காவிற்குச் சென்றுள்ளனர். ஆடுகளங்களுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதற்காகவே,



இவ்வாறு அவர்கள் முன்கூட்டியே செல்வதாக கூறப்படுகின்றது. இதேவேளை, இவ்வாறு முக்கிய வீரர்கள் சிலர் தென் ஆபிரிக்காவிற்கு முன்கூட்டியே செல்வதனால் அவர்களுக்குப் பயிற்சிகளில் உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு பயிற்சியாளர் கெரி கேஸ்டனும் கூடவே இருப்பது நல்லது என்பதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கருத்தியதால் கெரி கோர்ஸ்டனும் தென் ஆபிரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். டிசம்பர் 16 ஆம் திகதி முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஹொலிவூட்டில் சாதனை படைக்கின்ற 'எனிமேஷன்' திரைப்படங்கள்






ஹொலிவூட்டில் பெரியவர்களை மட்டுமன்றி; சிறுவர்களையும் மகிழ்விக்கும் திரைப்படங்கள் அவ்வப்போது வெளிவரத்தான் செய்கின்றன. இதில் தற்காலத்தில் கணினி முறை தொழில்நுட்பத்திலான 'எனிமேஷன்' (Animation) திரைப்படங்கள் உலகெங்கிலும் வெற்றிவாகை சூடி வருகின்றன. அந்த வரிசையில் சில தினங்களுக்கு முன்னர் வெளிவந்து சாதனை படைத்துள்ள எனிமேஷன் திரைப்படம்தான் 'டோய் ஸ்டோரி-3' (Toy Story-3) என்ற திரைப்படமாகும்.

ஏற்கனவே இரண்டு பாகங்கள் வெளிவந்த இந்த 'டோய் ஸ்டோரி' திரைப்படத்தின் மூன்றாவது பாகம்தான் இவ்வாறு வசூல் சாதனையைப் படைத்துள்ளது. ஹொலிவூட்டில் பொக்ஸ் ஓஃபீஸ் சாதனை என்றால் அது பண வசூலில் சாதனைகளை முறியடித்து முதல் நிலையில் இருப்பதைக் குறிப்பதாகும். அத்தகைய 'பொக்ஸ் ஓஃபீஸ்' சாதனையை இந்த டோய் ஸ்டோரி-3 திரைப்படம் முறியடித்துள்ளது. திரையிடப்பட்டு ஒருசில தினங்களுக்குள்ளேயே 110 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை இத்திரைப்படம் வசூல் செய்துள்ளதாம். உலகம் பூராவும் 4,028 திரையரங்குகளில் திரையிடப்பட்டுப் பெருமளவு லாபத்தை இத்திரைப்படம் ஈட்டியுள்ளமை அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.


### சிறுவர்களைக் கவர்ந்துள்ள 'Toy Story-3' திரைப்படம்

இத்திரைப்படத்தின் முன்னைய பாகங்களைவிட, தற்போதைய மூன்றாம் பாகம் இத்தகைய வரவேற்பைப் பெற்றுள்ளமைக்கு காரணம் அதிலுள்ள கதைக்கருவும் புதிய வடிவிலான கணினித் தொழில்நுட்பப் பயன்பாடுமேயாகும்.

ஹொலிவூட் திரையுலகில் இவ்வாறு 'பொக்ஸ் ஓஃபீஸ்' வசூல் சாதனையில் முதல் பத்து இடங்களில் 'டோய் ஸ்டோரி' முதலாவது இடத்தைப் பிடித்துள்ள அதேவேளை, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்துள்ளதும் சிறுவர்களைக் கவரக்கூடிய எனிமேஷன் திரைப்படங்களேயாகும். இதில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ள திரைப்படம் 'குரோவ்ன் அப்' (Grown Up) என்ற திரைப்படமாகும். அவ்வாறே, ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது ஷிரேக் ஃபோர் எவர் ஆஃப்டர் (Shrek Forever After) என்ற திரைப்படமாகும்.

எனவே, இவ்வாறு கணினியின் துணைகொண்டு வடிவமைக்கப்படுகின்ற 'எனிமேஷன்' திரைப்படங்களை சிறுவர், பெரியோர் என்று அனைவரும் விரும்பிப் பார்க்கத் தொடங்கியிருப்பதால் இனிவரும் காலங்களில் மனிதர்கள் நடித்து வெளிவருகின்ற திரைப்படங்களைவிட; 'கார்ட்டூன்' வடிவிலான இந்த 'எனிமேஷன்' திரைப்படங்கள் ஹொலிவூட்டில் பரவலாக வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# நிலவில் அதிகளவு நீர் வளம்

நிலவில் நீர் ஆதாரங்கள் அதிக அளவில் இருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு இந்தியாவின் 'சந்திரயான்' விண்கலம் நிலவில் நீர் இருப்பதைக் கண்டறிந்தது. ஏறக்குறைய ஓராண்டு கடந்துள்ள நிலையில், நாஸா விஞ்ஞானிகள் நிலவில் அதிக அளவில் நீர் ஆதாரங்கள் இருப்பதை உறுதி செய்துள்ளனர்.

ஏற்கனவே கணித்த அளவை விட, அதிகமான அளவில் அங்கு நீர் வளம் இருப்பதாக நாஸா வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலவை ஆராய்வதற்காக, அமெரிக்கா அனுப்பிய விண்கலம் நிலவில் நீர் இருப்பதை மேலும் உறுதி செய்துள்ளது. நிலவின் நிழற்பகுதியில் நீர், மண், பிற உபயோகமான தாதுக்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


மேலும், நிலவில் ரசாயன ரீதியில் மாற்றங்கள் அதிக அளவில் நடைபெறுவதால், அங்கு நீர் சுழற்சிக்கும் அதிக வாய்ப்பு உள்ளது என்றும் ஆய்வொன்றினூடாகத் தெரியவந்துள்ளது. நிலவின் நிழல் பரப்பில் பனிக்கட்டிகளாகவும் சில இடங்களில் திரவ நிலையிலும் நீர் உள்ளதாக ஆய்வு முடிவுகளிலிருந்து தெரிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதாக சந்திரன் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கும் விஞ்ஞானக் குழுவின் தலைவர் மைக்கல் வார்கோ தெரிவித்துள்ளார்.

நிலவில் கடந்த காலங்களில் நீர் உருவாகி அது பனியாக உறைந்திருக்கலாம். அல்லது ரசாயன மாற்றங்களால் மிக அதிக அளவில் பனி உருவாகி இருக்கவும் வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் பனிக்கட்டிகளை நீராக மாற்றி, நிலவில் மனிதன் வசிக்க முடியுமா? என்பதற்கான ஆய்வுகள் தற்போதளவில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நிலவில் மிக அதிக அளவில் கிடைக்கும் ஹைட்ரஜன், அமோனியா, மெதேன் வாயுக்களை எரிபொருளாக மாற்றி வாழ்வது குறித்த ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவிர, நிலவில் காணப்படும் வாழ்வியல் சூழல் மற்றும் அங்கு நிலவும் தட்பவெப்பம் உள்ளிட்டவை குறித்தும், நிலவில் நீர் உருவானது எப்படி? அங்கு பனிக்கட்டிகள் அதிக அளவில் காணப்படுவது எதனால்? என்பது தொடர்பான ஆராய்ச்சிகளும் தற்போதளவில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்றும் வார்கோ தெரிவித்துள்ளார்.



# விண்வெளித் தகவல்கள்

# 11 வருடங்களுக்கு ஒருமுறை சூரியன் புதுப்பிக்கப்படுகின்றது



11 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியனில் சுழற்சி முறையில் மாற்றம் நிகழ்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். லண்டன் இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த ஜொவன்னா ஹெய்க் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு இது குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரை செயற்கைக்கோள்கள் மூலம் சூரியனின் செயற்பாட்டை தொடர்ச்சியாகக் கண்காணித்ததன் மூலமாகவும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலமாகவுமே இதுபற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்துள்ளது.

இது குறித்து தலைமை விஞ்ஞானி ஜொவன்னா ஹெய்க் கூறும்போதும், "11 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூரியமண்டலத்தில் நிகழும் சுழற்சிகள் மூலம் சூரியன் தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறது. இந்த சுழற்சியின் ஆரம்பத்தில் பூமியை சூரியக் கதிர்கள் அவ்வளவாகத் தாக்குவதில்லை. மாறாக, இந்தக் காலகட்டத்தில்தான் பூமி குளிர்ச்சியாக இருக்கின்றது. சுழற்சி முடிவில் வெப்பம் அதிகரிக்க வீரியத்துடன் எழுகிறது. 11 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த மாற்றம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. இதில் சில குழப்பங்களும் இருக்கின்றன. இந்த 11 ஆண்டு சுழற்சிப்படி, தற்போது பூமியைக் குளிர்விக்கும் காலகட்டத்தில் சூரியமண்டலம் உள்ளது. ஆனாலும், புவிவெப்பம் அதிகரித்து வருகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, சூரியனின் இயக்கம் தொடர்பாக, முழுமையான விளக்கத்தினை இதுவரை பெற முடியாதுள்ளது. இதுகுறித்த ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. பூமி வெப்பமடைய சூரியக் கதிர்கள் மட்டும் காரணமல்ல. இயல்பாகவே பூமி வெப்பமடையும் தன்மையும் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின்னர் அது தானாகவே குளிரும் தன்மையையும் கொண்டது. இக்கால இடைவெளி அவ்வப்போது மாறுபடுகின்றது என்று குறித்த ஆராய்ச்சிக்குழு தகவல்களை வெளியிட்டுள்ளது.

வால்வெள்ளி (Comet), சிறுகோளை ஒத்த அளவிலான சிறியதொரு விண் பொருளாகும். இது பெரும்பாலும் பனிக்கட்டியாலானது. சூரியக் குடும்பத்தின் உட்பகுதிக்குள் வரும் வால்வெள்ளிகளில் பெரும்பாலானவை மிக நீண்ட நீள்வளையச் சுற்றுப்பாதையைக் கொண்டுள்ளன. 'dirty snowballs' என்று பெரும்பாலும் வர்ணிக்கப்படும் வால்வெள்ளிகள், பெருமளவு உறைந்த காபனீரொட்சைட், மெதேன் மற்றும் நீர் என்பவற்றுடன் தூசி, கனிமக்கூட்டு என்பனவும் கலந்து உருவானவை ஆகும். சூரிய நெபியுலாக்கள் ஒடுங்கும்போது எஞ்சும் கழிவுகளே, வால்வெள்ளிகள் என்று கருதப்படுகின்றது.





# "2019 இல் பூமியை விண்கல் தாக்க வாய்ப்பில்லை"

## வானியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு



'2002 NT7' என்ற விண்கல் விநாடிக்கு 25 கிலோமீற்றர் வேகத்தில் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் இது 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதியளவில் பூமியைத் தாக்கும் என்றும் விஞ்ஞானிகள் நாள் குறித்திருந்தனர். இந்த விண்கல்லின் அகலம் 3 கிலோமீற்றர். இது பூமியில் மோதினால் 77 லட்சம் அணுகுண்டுகள் வெடித்தது போன்ற பேரழிவு பூமியில் ஏற்படும் என்றும் இதனால், பூமியில் ஐந்தில் ஒரு பகுதி அழிந்துவிடுவதோடு, கடல் பகுதியில் மூன்றில் ஒரு பகுதி வற்றிவிடும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து 16 மணிநேரம் வானம் இருளாக இருக்கும், உலக சனத்



தொகையில் 12 கோடி பேர் இறந்துவிடுவார்கள், ஓசோன் படலத்தில் பெரிய துளை விழுந்து பகலில் அதிக வெப்பமும் இரவில் அதிக குளிரும் இருக்கும் என்றெல்லாம் வானியல் துறை விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், பின்னர் வெளியான ஆராய்ச்சி முடிவுகளை அடுத்து, இந்த விண்கல் பூமியைத் தாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அப்படியே பூமியின் பாதையில் வந்தாலும், அதைத் தாக்கி அழிக்க முடியும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். விண்கற்கள் பூமியின் பாதையில் வருவதும், பின்பு அவை விலகிச் செல்வதும் விண்வெளி வரலாற்றில் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்

'மழைக்கால தொற்றுநோய்த் தடுப்பு' எனும் ஆக்கம் காலத்தின் தேவைக்கேற்ப பயனளிக்கும் வகையில் அமைந்திருந்தது. 'எறும்புகளின் உலகுக்கு ஒரு பயணம்' எறும்புகளின் தொடர்பாடல் முறை பற்றி விளக்கி, எனது நீண்டகால சந்தேகங்கள் பலவற்றுக்கு தீர்வைத் தந்தது.

**-எம்.யசிந்தன், வோல்ஸ் லேன், கொழும்பு-15.**

'மீன்கள்', 'எறும்புகள்' பற்றிய ஆக்கங்கள் வியப்பான, விநோதமான தகவல்களைத் தாங்கி வந்தன. 'கற்றலில் உறக்கத்தின் நிலை', 'பரீட்சையில் பதற்றம் வேண்டாம்' போன்ற ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமைந்தன.

**-அமீர் மொஹமட், வாழைச்சேனை.**

மாணவர்களின் அறிவுக்கு புதுமணமூட்டும் விஜய்யே! நீ சுமந்து வந்த 'ஓர் உலகம்-ஓர் எதிர்காலம்' என்ற விடயம் புவியியல் பாட கற்கைக்கு மிகவும் பயனுடையதாக அமைந்தது. அவ்வாறே, சூழல் சம்பந்தமான அதிநவீன பல விடயங்களை நான் மேலும் விஜய்யினூடாக எதிர்பார்க்கிறேன். உன் புகழும் சிறப்பும் ஓங்குக!

**-ஸப்ரினா நசீர், தரம்-12(கலை), இ/தமிழ் மத்.கல்., பலாங்கொடை.**





நீ ஈன்பவை இனியவை; புதியவை; சிறப்பானவை. 'ஓர் உலகம்-ஓர் எதிர்காலம்', 'எறும்புகளின் உலகுக்கு ஒரு பயணம்' போன்ற ஆக்கங்கள் மிகவும் நன்மையளித்தன. தவணைப் பரீட்சைகள் நடந்த சந்தர்ப்பத்தில் சிறந்த ஆறுதலாக 'பரீட்சையின்போது பதற்றம் வேண்டாம்' எனும் ஆக்கம் அமைந்தது.

**எஃப்.நிஸ்ரினா, தரம்-9G, அல்-அக்ஷா மு.ம.வித்., ஏஹலியகொடை.**

'மீன்கள் பற்றிய வியப்பான தகவல்கள்', 'வாரம் ஒரு நாடு' என்பன மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. 'எறும்புகளின் உலகுக்கு ஒரு பயணம்', 'ஓர் உலகம்-ஓர் எதிர்காலம்' போன்றவை மிகவும் பிரயோசனமாக அமைந்தன. 'பூமியில் விழும் எரிகற்கள்' மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. 'யோகாசனம் பயில்வோம்' எனும் புதிய தொடர் வரவேற்பிற்குரியது. 'ஒல்லாந்தர்', 'சங்கிலி மன்னன்', 'இராமாயணம்' போன்ற கதைப்பகுதிகள் மிக நன்றாக இருந்தன.

**-அபிஷேக் கோபால், விவேகானந்தா கல்., கொழும்பு-13.**

'மீன்கள் பற்றிய தகவல்கள்', 'எறும்புகளின் உலகுக்கு ஒரு பயணம்' போன்றன நான் உன்னில் சுவாரஸ்யமாய் வாசித்தவை. வரலாற்றுச் சரிதைகளைக் கதை வடிவில் தருவதால் அவை இலகுவாக எம் மனதில் பதிகின்றன.

**-எம்.இல்மா பர்வின், அல்-பாஸியதுல் நஸ்ரியா மு.பா.ம.வித்., பேருவளை.**

'மீன்கள்', 'எறும்புகள்' பற்றிய கட்டுரைகள் சிறுவர்களாகிய எமக்கு விநோதமாக இருந்தன. 'பரீட்சையின்போது பதற்றம் வேண்டாம்' எனும் ஆக்கத்தினூடாக, சிறந்த மனநிலையைப் பெற்றோம்.

**-வி.தனுகுமார், இந்துக் கல்., மாத்தளை.**

நீ தாங்கி வந்த ஆக்கங்களில் 'மழைக்கால தொற்றுநோய்கள்' என்ற ஆக்கத்தின் மூலம் நான் பெரிதும் பயன் பெற்றேன். அத்துடன், 'மீன்கள் பற்றிய வியப்பான தகவல்கள்' என்னை வியக்க வைத்தது. நீ இது போன்ற மேலும் பல ஆக்கங்களை தர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**-ஏ.எம்.மஹ்பிரா, தி/அல்-ஹிறா மு.ம.ம.வித்., கிண்ணியா.**

உன்னில் பிரசுரமான அனைத்து ஆக்கங்களும் மிக நன்றாக இருந்தன. அதிலும், 'விண்வெளித் தகவல்கள்', 'தெரிந்து கொள்வோம்', 'பரீட்சையின்போது பதற்றம் வேண்டாம்', 'வாரம் ஒரு நாடு', 'மீன்கள் பற்றிய வியப்பான தகவல்கள்', 'கற்றலில் உறக்கத்தின் நிலை' போன்ற அம்சங்கள் மிகவும் சிறப்பானவை. அறியாத பல விடயங்களை உன் வாயிலாகத் தெரிந்து கொண்டேன்.

**-எஃப். நிஸ்னா, தரம்-11T, உஸ்வதுன் ஹஸனா மு.வித்., கட்டுகொடை.**

இந்த இதழில் (08.12.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.12.2010.

அனுப்ப வேண்டிய முகவரி: வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.





**அற்லஸ் அறிவுக்கு விருந்து 290**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## குழம்பியுள்ள பழமொழிகளை ஒழுங்கமைக்க (1)

1. தேர்/இல்லாத நாடு/அரசன்/அச்சில்லாத
.......................................
2. படார்/நம்பினோர்/கைவிடப்/கடவுளை
.......................................
3. வாய்ச்சொல்/தலைச்சுமை/சொல்கிறவனுக்கு/செய்கிறவனுக்கு
.......................................
4. கொதிக்கிறது/எரிகிறதைப்/அடங்கும்/பிடுங்கினால்
.......................................


## வித்தியாசங்களில் X அடையாளமிடுங்கள் (3)



## அடுத்து வரவேண்டிய உருவை வெட்டிப் பொருத்தமான இடத்தில் ஒட்டுக (4)



## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுங்கள் (5)





## பின்வரும் தமிழ், ஆங்கிலச் சொற்களை அகர வரிசைப்படி எழுதுக (2)

தவம், தம்பி, கடல், ஓநாய், ஐயம், மகுடம்

1. ......................... 4. .........................
2. ......................... 5. .........................
3. ......................... 6. .........................

elephant, new, angel, super, cost, tree

1. ......................... 4. .........................
2. ......................... 5. .........................
3. ......................... 6. .........................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 287 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எச்.அஜ்வாத், 1, கமன்தெனிய வீதி, கிரிங்கதெனிய.

**போட்டி: 02**
சி.அபிலாஷன், உப்புக்கேணி வீதி, பெரியமாவடி.

**போட்டி: 03**
எஃப்.மாஷிதா, 194/A, பழைய வீதி, பேருவளை.

**போட்டி: 04**
சி.தனீசன், நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.

**போட்டி: 05**
எஃப்.முன்தஹா, 17D, முஸ்லிம் வீதி, வெலிப்பென்ன.


பாராட்டுப் பெறுவோர்:
- ★ கோ.கண்ணன், கோப்பாய்.
- ★ எச்.எம்.சபா, உக்குவளை.
- ★ எஸ்.அனீசா, உடபாகை.
- ★ வை.எஃப்.ஹப்ஸா, பண்டாரகம.
- ★ விக்னேஸ்வரன், தெஹிவளை.
- ★ சதுர்சன், புத்தளம்.
- ★ முஹம்மட் தில்மிஸானி, அக்கரைப்பற்று-01.
- ★ ம.வினோதினி, கொழும்பு-14.
- ★ பாத்திமா ஸஹ்றினா, கொட்டாரமுல்ல.
- ★ வி.தர்சன், சுழிபுரம்.

## அறிவுக்கு விருந்து 287 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**





**போட்டி: 03**
1. காரீயம்
2. நகுலன்
3. நித்திரை செய்தல்
4. குரும்பை
5. எஜமான்
6. அரி

**போட்டி: 03**
1. curry leaf
2. guava
3. bamboo
4. paddy
5. garlic

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கொலை வெறி தீராமல் தான் பெற்ற மகளைப் பார்த்தான் கயவன் அப்பாமுதலி. ''பாதகி! என் திட்டத்தை உணராத பேயே! உன்னை மகிழ்ச்சியாக வாழ வைப்பதற்குத்தானே இத்தனையும் செய்தேன். என்னையே காட்டிக்கொடுத்துவிட்டாயே! உன்னை உயிரோடு விட்டு வைத்தால் எனக்கு ஆபத்து. என் வாளுக்கு அடுத்த பலி நீதான்'' என்று கூறி அவள் மீது வாளை வீசினான் அப்பாமுதலி***

ஒரு மயிர் இழப்பினும் உயிர் வாழாதாம் கவரிமான். தமிழ்ப் பெண்களும் அத்தகையோர்தான்! கணவனுக்காகத் தேர்ச்சில்லில் அச்சாணியாக விரல் கொடுத்தவளும், கணவன் இறந்த செய்தி கேட்டு எதிரியை வெட்டி வா! வென்று வா! என்று போருக்குத் தன் ஒரே மகனை அனுப்பியவளும் தமிழ்ப் பெண்ணேதான்! அந்தப் பரம்பரையில் வந்த தமிழ்ப் பெண்கள் மன்னனைத் தங்கள் தமிழ் மறவனைக் காட்டிக்கொடுக்கத் துணிவார்களா? தோழி நடந்ததையெல்லாம் தன்னுயிர் தோழியான அப்பாமுதலியின் மகளிடம் கூறிக்கொண்டிருந்தாள். அவ்வேளையில் அங்கே கொடியோன் அப்பாமுதலி வந்து நின்றதை அவர்கள் காணவில்லை.

மன்னனிடம் தான் கூறிய பொய்யுரைக்காமல் உண்மையைக் கூறியதையும் அதை அவள் தோழியாகிய தன் மகளுக்குக் கூறியதைக் கேட்டதும் பின்னால் நின்ற அப்பாமுதலி ஆவேசமானான். தன் கையிலிருந்த வாளால் ''துரோகி'' எனக் கூறியவாறே தோழிப்பெண்ணின் சிரசைத் தரையில் வீழ்த்தினான் அந்தப் படுபாவி.

கொலை வெறி தீராமல் தான் பெற்ற மகளைப் பார்த்தான் அந்த அப்பாமுதலி, ''பாதகி எந்தன் திட்டத்தை உணராத பேயே! நான் பெற்ற உன்னை களிப்புடன் வாழ வைப்பதற்காகவே இத்தனையும் செய்தேன். ஒன்றும் புரியாத பேதையே பிதாவையே காட்டிக்கொடுக்கத் துணிந்த பாவி. உன்னையும் உயிரோடு விட்டால் எனக்கு ஆபத்து. அதனால் என் வாளுக்கு அடுத்த பலி நீதான்




அரியாலையூர் சி.சிவதாசன்

எனக்கூறி அவள்மீது வாளை வீசினான் அப்பாமுதலி. வெட்டுண்ட அவன் மகளும் தரையில் சாய்ந்தாள். தன் செல்வ மகளை வெட்டிய அந்தப் பாதகன் அவ்விடத்தைவிட்டு விரைவாக அகன்றான். வீழ்ந்து குற்றுயிராகக் கிடந்த மங்கை ''காத்தேன் என் நாட்டினை. என் இன மக்களை'' என வேதனையுடன் புலம்பினாள்.



## சங்கிலி மன்னனின் பலகால நல்லாட்சி

இரத்தச் சேற்றில் கிடந்த அவளை அங்கு வந்த சங்கிலி மன்னன் கண்டான். அங்கு நடந்தவை அனைத்தையும் பார்த்து மிகுந்த அதிர்ச்சியடைந்தான். குற்றுயிராய்க் கிடந்த அவளைத் தன் மடிமீது கிடத்தி ''பெண்ணே! தமிழினத்தின் தன்னிகரில்லா மங்கையே உன்னால் எம் நாடு காப்பாற்றப்பட்டது. மங்கையே உன் தூய உள்ளத்தை நம் நாடு என்றும் மறக்காது. அளவிட முடியாத உன் தியாகத்தால் அந்தக் காக்கைவன்னியன் என்னிடம் மாட்டிக்கொண்டான். என் அன்புக்குரிய அண்ணனும் அகப்பட்டுக் கொண்டான். அயோக்கியனான உந்தன் தந்தையும் மாட்டிக் கொண்டான். பறங்கியருக்கு இந்த மண்ணில் இடமே இல்லை. நான் இருக்கும் வரை அவர்களை எதிர்த்தே தீருவேன். இது சத்தியமென'' அவனுரைத்தான்.

''மன்னா! என்னாவி பிரியப் போகிறது. அதற்குமுன் நான் கேட்பதை தாங்கள் செய்வீர்களா?'' என்றாள் அப்பாமுதலி மங்கை. சங்கிலி மன்னன் கூர்ந்து அவளை நோக்கி, ''சொல் பெண்ணே செய்வேன்'' என்றான். ''மன்னவா! என் தந்தை செய்த பிழையினைப் பொறுப்பாய். இந்நிகழ்வுக்காக என் சுற்றத்தைப் பழி வாங்காதே! நாம் வாழ்வது சிறிது காலம்தான் ஆனால், அக்காலத்திலும் இன்பதுன்ப நிகழ்வுகளை அனைவரும் முற்றுமுழுதாக அனுபவிக்க முடியாது. எனது ஆவி இன்னும் சில நிமிடங்களில் இவ்வுலகைவிட்டுப் போகப்போகின்றது. எனவே, நடந்து முடிந்தவற்றைப் பற்றிச் சிந்திக்காது, நல்லாட்சி நடத்தி எம்மண்ணைக் காப்பாய்'' எனக் கூறி மன்னனின் இரு கரங்களையும் தன் கைகளால் இறுகப் பற்றி தன்னுயிர் நீத்தாள். மன்னன் சங்கிலி கலங்கினான். என்றுமே கண்ணீர் சிந்தாத அவன் விழிகள் அன்று கண்ணீரைச் சொரிந்தன. அப்பொழுது அங்கே காவலன் ஒருவன் விரைந்து வந்தான். அமைச்சர் அப்பாமுதலி தற்கொலை செய்து கொண்டான் என்ற செய்தியை சங்கிலி மன்னனிடம் கூறினான். பாவம்! தந்தைக்காகப் பரிந்து பேசிய மங்கை சாவைத் தழுவிவிட்டாள். தூயவள் இச்செய்தி கேளாது போய் விட்டாள். இக்கொடிய நிகழ்வின் பின் அரண்மனையில் இருந்த அமைச்சன் பரநிருபசிங்கனை எங்கும் காண முடியவில்லை.

வேதனையோடு சிலகாலங்களைக் கழித்த சங்கிலி மன்னன் அதிலிருந்து விடுபட்டு யாழ்ப்பாண ராச்சியத்தை நன்கு பரிபாலித்தான். சிறிது காலம் சங்கிலியின் வீரத்துக்குமுன் நிற்க முடியாமல் ஒதுங்கிய போர்த்துக்கேயப் பறங்கியரும் காக்கை வன்னியனும் சங்கிலி மன்னனுக்கெதிரான நடவடிக்கைகளில் மீண்டும் இறங்கினார்கள். எனினும், சங்கிலியின் ஆட்சிக் காலம் இனிதே சிறந்து விளங்கியது.

*(சங்கிலி மன்னன் தொடர் இந்த இதழுடன் நிறைவு பெறுகிறது. இதனை வழங்கிய எழுத்தாளர் எழுதும் 'வேப்ப மரத்துப்பேய்' தொடர்கதை இந்த இதழில் இருந்து (17 ஆம் பக்கம்) ஆரம்பமாகிறது)*



## யோகாசனம் பயிலவோம் - 3

**திரிகோணாசனம் செய்யும் முறை:**

கால்களை அகற்றி நின்று கொண்டு கைகளை விரித்து நீட்டி நேர்கோட்டில் வைத்து ஒவ்வொரு பக்கமாகச் சரிந்து கால் பாதங்களில் படுதல் வேண்டும் உடம்பு முன்புறம் பணியாமல் கவனித்துக் கொள்ளவேண்டும்.

**பயன்கள்:**

முள்ளந்தண்டு உறுதியடையும். நுரையீரல் சீரான இயக்கத்தை அடையும். மலச்சிக்கல் சீராகும்.

## நொபெல் பரிசு தரும் மூன்று 'ப'க்கள்



நொபெல் பரிசு பெற வேண்டும் என்பது பெரும்பாலானோரின் கனவு. அந்தப் பரிசில் அப்படி என்னதான் இருக்கிறது? மிகப்பெரிய கௌரவம், அங்கீகாரம் என்பதெல்லாம் ஒருபுறம். நொபெல் பரிசு என்பது மூன்று 'ப'க்களைக் கொண்டது. பதக்கம், பத்திரம், பணமுடிப்பு என்பவைதான் அந்த மூன்று 'ப'க்கள். மிக உயரிய பரிசாகக் கருதப்படுவதற்கு இவை மூன்றும்தான் முக்கிய காரணம்.

### பதக்கம்

நொபெல் பரிசாக வழங்கப்படும் பதக்கம், சுத்தமான தங்கத்தால் ஆனது. 1980 ஆம் ஆண்டு வரை இந்தப் பதக்கத்தை 23 கரட் தங்கத்தால்தான் செய்தனர். ஆனால், தற்போது 18 கரட் தங்கத்தால் செய்து, அதன்மீது 24 கரட் முலாம் பூசிக் கொடுக்கிறார்கள். இந்தப் பதக்கத்தின் எடை சுமார் 200 கிராம். இந்தப் பதக்கத்தின் ஒருபுறம் இந்தப் பரிசை உருவாக்கியவ[illegible] அல்பிரட் நொபெலின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அ[illegible]துடன், அவர் பிறந்த மற்றும் மறைந்த ஆண்டு லத்தீன் மொழியில் குறிக்கப்பட்டிருக்கும். அனைத்துப் பதக்கங்களிலும் இந்தப் பகுதி ஒரே மாதிரியாகவே இருக்கும். பதக்கத்தின் மற்றொரு பகுதி, பரிசு வழங்கப்படும் துறைக்கு ஏற்ப மாறுபட்டுக் காணப்படும்.

### பத்திரம்

நொபெல் அறக்கட்டளையானது இந்தப் பத்திரத்தை 'டிப்ளோமா' என்று அழைக்கிறது. உலக அளவில் மிகத்திறமையான கலைஞர்களை அழைத்து, பாராட்டுப்பத்திரம் வடிவமைக்கப்படுகிறது. இதை வடிவமைத்துக் கொடுப்பதற்காகவே, உலகம் முழுவதும் சில வடிவமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வடிவமைத்துத் தருவதில் சிறந்ததை மட்டுமே நொபெல் அறக்கட்டளை தெரிவு செய்யும். ஒவ்வொரு பாராட்டுப் பத்திரத்தையும் சுவீடிஷ் மற்றும் நோர்வே மொழியில் அச்சிட்டிருப்பார்கள். பத்திரத்தைப் பெறுபவரின் பெயரும், அவர் செய்த சாதனையும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### பணமுடிப்பு

நொபெல் பரிசாக வழங்கப்படும் பரிசுத்தொகையானது பணமாக மட்டுமே கொடுக்கப்படும். பணம் என்றால் 10 மில்லியன் சுவீடன் குரோனர். இலங்கை மதிப்பில் சுமார் 18 கோடி ரூபா. ஒரு துறை சார்பாக ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டால், முழுத்தொகையும் அவருக்கே கொடுக்கப்படும். சில சமயங்களில் ஒரே துறைக்கு இருவர் தேர்வு செய்யப்படுவர். அப்போது பரிசுத் தொகையை சரிபாதியாகப் பிரித்துக் கொடுப்பார்கள்.

சில நேரங்களில் ஒரே துறைக்கு மூன்று பேர் தெரிவு செய்யப்படுவதும் உண்டு. அப்போது மொத்தப் பணத்தையும் இரண்டு பங்காகப் பிரித்துக் கொள்வர். இதில் ஒரு பங்கு, மிக முக்கியமான கண்டுபிடிப்பை நிகழ்த்தியவருக்கு அளிக்கப்படும். மிகுதி உள்ள மற்றொரு பங்கை இரண்டாகப் பிரித்து மீதமுள்ள இருவருக்கும் கொடுப்பார்கள். யாருக்கு எவ்வளவு பணம் பரிசாக அளிக்கப்பட வேண்டும் என்பதை நொபெல் அறக்கட்டளை மட்டுமே முடிவு செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அச்சுறுத்தும் 'சைபர்' யுத்தம்




அண்மைக்காலமாக, கணினித் துறையில் பேசப்படுகின்ற ஒரு வார்த்தைதான் 'சைபர் தாக்குதல்' (Cyber War) என்ற வார்த்தையாகும். இன்னொரு வகையில் இதனை 'சைபர் யுத்தம்' என்றும் குறிப்பிடுகின்றனர். இணையத்தின் வழியே






அனுப்பப்படுகின்ற 'வைரஸ்' மூலம் கணினித் தொகுதிகளை செயலிழக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

பொதுவாக, இதுவரை காலமும் யுத்தம் என்றால் ஆயுதங்களினால் மேற்கொள்ளப்படும் யுத்தத்தையே உலகம் அறிந்திருந்தது. ஆனால், டிஜிட்டல் முறையிலான யுத்தமே இந்த 'சைபர் யுத்தமாக' இன்று பரிணமித்துள்ளது. உலகம் இன்று டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் இயங்குகின்ற நிலையில் அந்த டிஜிட்டல் இயக்கத்தை டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக்கொண்டே செயலிழக்கச் செய்து எதிரியின் செயற்பாட்டை ஸ்தம்பிதமடையச் செய்வதற்கு பல நாடுகள் இன்று இந்த சைபர் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன.

**இணையத்தின் வழியே மேற்கொள்ளப்படுகின்ற 'சைபர்' தாக்குதல்களினால் தற்காப்பு டிஜிட்டல் படைகளை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உலக நாடுகள் உள்ளன**

இத்தகைய ஒரு நிலையில் சைபர் தாக்குதலிலிருந்து தம்மை தற்காத்துக் கொள்ள வேண்டியநிலை பல நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அதற்காகவே 'சைபர் போர் படை' எனும் டிஜிட்டல் பதிலடி வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவும்கூட இதற்கென விசேட டிஜிட்டல் தொழில்நுட்பப் படையொன்றை உருவாக்கியுள்ளது.

சைபர் படையை ஏற்படுத்துவதும் தற்போதைய நிலையில் அத்தியாவசியம் ஆகியுள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. இதனைக் கருத்திற்



கொண்டே, பெண்டகனில் விசேட பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டது. 'சைபர் கொம்' (Cyber com) என்று பெயரிடப்பட்டுள்ள இதன் பணி என்னவென்றால் வேற்று நாடொன்றிலிருந்து தமது நாட்டிற்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய சைபர் தாக்குதலைத் தடுப்பதேயாகும்.







பிரிட்டன், இஸ்ரேல், சீனா, வட கொரியா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளும் இவ்வாறான சைபர் தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ளும் டிஜிட்டல் படைகளைக் கொண்டுள்ளன.

இதிலிருந்து என்ன புரிகின்றதென்றால் ஆயுதங்களினால் போர் புரிந்து பழக்கப்பட்ட நாடுகள் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தித் தமக்கிடையே இணையத்தின் வழியே, பாரிய யுத்தமொன்றை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றதையே உணரமுடிகின்றது.

இதனால், இதற்கெதிரான அபிப்பிராயங்களும் மக்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. உக்ரேன் நாட்டைச் சேர்ந்த சர்வதேச சட்டத்துறைப் பேராசிரியரான அலெக்சாண்டர் மெரெஸ்கோ என்பவர் சைபர் யுத்தத்தின் ஆபத்தை உணர்ந்து, இதற்கெதிரான அமைப்பொன்றை உருவாக்கியுள்ளார். சைபர் யுத்தத்தைத் தடை செய்யும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் அமைப்பாகவே இது செயற்பட இருக்கின்றது.

'உலகமே இன்று யுத்தக்களமாக மாறி வருகின்ற நிலையில் அதன் கொடுமைகளை அனுபவித்து வருகின்ற நாம் இணையத்தளத்தையும் போர்க்களமாக மாற்றத்தான் வேண்டுமா? என்பதே பேராசிரியர் அலெக்சாண்டரின் கருத்தாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 08, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org